Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JULY 18 2025

புதன்கிழமை 18, ஜூன் 2025 | ஒளி: 10 கதிர் 263 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

இஸ்ரேல் – ஈரான் யுத்தம்

# சபையை சூடேற்றியது

சஜித் அணி வெளியேற்றம்; தமிழரசு உள்ளே இருந்தது

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் யுத்தம், அங்கு உக்கிரமான நிலைமைக்கு சென்றிருக்கும் நிலையில், இந்த விவகாரம், இலங்கை பாராளுமன்றத்திலும், செவ்வாய்க்கிழமை (17) அன்று கடுமையாக சூடுபிடித்திருந்தது.


இந்த விவகாரத்துக்கு அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும் என எதிர்க்கட்சியைச் சேர்ந்த பலரும் கேள்வியெழுப்ப, சபாநாயகரிடம் நேரத்தைக் கேட்டிருந்தனர். எனினும், அதற்குச் சபாநாயகர் இடமளிக்கவில்லை. இதனால், சபையில் பெரும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

இஸ்ரேல் - ஈரான் யுத்தம், அதனால் இலங்கை எதிர் கொள்ளப்போகும் நெருக்கடிகள் தொடர்பில் கருத்து வெளியிடுவதற்கு ஒன்றரை நிமிடங்களை ஒதுக்குமாறு அடிக்கடி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொரடாவான கயந்த கருணாதிலக்க ஆகியோர் சபாநாயகரிடம் நேரம் கோரினர்.

சபாநாயகரும் மற்றும் சபை முதல்வரும் அதற்கு இணங்காமையினால் சபையில் இரு தரப்புக்குமிடையில் கடும் வாய்ச்சண்டை ஏற்பட்டது. நிலைமை அடுத்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் சபையிலிருந்து வெளிநடப்பு செய்தன.

தொடர்ச்சி P2





## மிகப் பெரிய லொத்தர் பரிசு

இலங்கை வரலாற்றில் மிகப் பெரிய லொத்தர் பரிசை ஒருவர் வென்றுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் திணைக்களத்தின் மெகா பவர் லொட்டரியின் 2210ஆம் இலக்க சீட்டிழுப்பில் கிடைத்த ரூ.474,599,422 பெரும் பரிசு இதுவாகும்.

இந்த பெரும் லொத்தர் பரிசை, வடமத்திய மாகாணத்தில் உள்ள கொக்ரெல்ல பகுதியைச் சேர்ந்த லொத்தர் முகவரான எச்.ஏ.ஜானகி ஹேமமாலாவால் விற்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இலங்கையில் மிகப் பெரிய லொத்தர் பரிசாக ரூ.230 மில்லியன் பரிசு வழங்கப்பட்டது, இதுவும் மெகா பவர் லொத்தரில் இருந்துதான் கிடைத்துள்ளது. லொத்தர் வெற்றியாளர் இன்னும் அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## “எதிர்க்கட்சி தலைவர் தகுதியற்றவர்”




எதிர்க்கட்சி எம்.பிக்கள் ஒரு சிலரின் கீழ்த்தரமான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சி தலைவருக்கு உண்டு. அவ்வாறு அவர் செயற்பட முடியாவிட்டால் அவர் எதிர்க்கட்சி தலைவ பதவியில் இருப்பதற்குத் தகுதியற்றவர் என சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

இரு தரப்பு கடன் மறுசீரமைப்பில்

## பிரான்ஸ்- இலங்கை கையெழுத்து



இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (MoU) பரிந்துரைகளை செயல்படுத்துவதற்காக, 2024 ஜூன் 26, அன்று முடிவடைந்த இரு தரப்பு ஒப்பந்தத்தில் பிரான்சும் இலங்கையும் செவ்வாய்க்கிழமை (17) கையெழுத்திட்டுள்ளன.

பிரான்ஸ், இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் இணைத் தலைமையின் கீழ், பாரிஸ் கிளப் கடன் வழங்குநர்களுடன் இணைந்து செயல்படும் அதிகாரப்பூர்வ கடன் வழங்குநர்கள் குழுவுடன் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் எட்டப்பட்டது.

தொடர்ச்சி P2

சிந்துப்பாத்திக்கு அண்மையில் மீட்கப்பட்டவை

## “ஆடைகளின்றி அடித்து நொறுக்கி எலும்புக்கூடுகள்”



செம்மணி சிந்துபாத்தி மயானத்தை அண்மித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது, மீட்கப்பட்ட கைக் குழந்தைகள், பெண்கள், ஆண்கள். சிறுவர், சிறுமியர்களின் எலும்புக்கூடுகள் எந்த ஆடைகளற்று அடித்து நொறுக்கி, சித்திரவதை செய்து கொல்லப்பட்டவர்களின் என்புக்கூடுகள் ஆகும் என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற குழுத் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பியுமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## கதிர்காம காட்டு வழி உ தினங்களில் திறப்பு



வி.ரி.சகாதேவராஜா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழா உற்சவத்திற்காக காட்டு வழிப்பாதை வெள்ளிக்கிழமை (20) காலை 5.30 மணியளவில் திறக்கப்படும்.


காட்டுப் பாதை பயணிப்பதற்கு உகந்ததாகக் காட்சியளிக்கிறது என அங்கு நேரடியாகச் சென்று வந்த சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபகர் சிவசங்கர் ஜீ தெரிவித்தார்.

தொண்டு நிறுவனங்களும் அப் பாதையின் இன்றைய சீரான நிலை பற்றி அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

“ஈரான் இராணுவத்

## தளபதி அலி ஷத்மானி கொல்லப்பட்டார்”



தெஹ்ரானில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஈரானின் போர்க்கால தலைமைத் தளபதியும், ஈரானிய உச்சத் தலைவர் அலி கமேனிக்கு மிக நெருக்கமானவருமான அலி ஷத்மானியைக் கொன்றதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

கற்பிட்டி

## தலைவர் மீது தாக்குதல்




மதுரங்குளிய விருதோடை பகுதியில் கற்பிட்டி பிரதேச சபைத் தலைவர் மற்றும் ஒரு குழுவினர் பயணித்த மோட்டார் வாகனத்தின் மீது ஒரு குழுவினர் தாக்குதல் திங்கட்கிழமை (16) இரவு நடத்தியதாகவும், வாகனத்திற்குப் பலத்த சேதம் விளைவித்ததாகவும், தலைவரையும் தாக்கியதாகவும் மதுரங்குளிய பொலிஸார் தெரிவித்தனர்.

தேசிய மக்கள் சக்தி கட்சியில் இருந்து கற்பிட்டி பிரதேச சபைக்கு இந்த முறை தேர்ந்தெடுக்கப்பட்ட அப்துல் சத்தார் முகமது ரிக்காஸ் பயணித்த மோட்டார் வாகனம் தாக்கப்பட்டது.

தலைவர், மேலும் சிலருடன், தேசிய மக்கள் சக்தி கட்சியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முகமது பைசலின் வீட்டிற்குத் திரும்பி, விருதோடை வழியாக நுரைச்சோலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, அந்த வீட்டிற்கு அருகில் தாக்கப்பட்டார்.

இது தொடர்பாக அவர் பொலிஸார் முறைப்பாடு செய்துள்ளார். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, அந்தப் பகுதியைப் பாதுகாக்க பொலிஸ் சிறப்புப் படையினர் அனுப்பப்பட்டுள்ளனர்.

## கொட்டகலையில் சேவல் கூவியது

எம்.கிருஷ்ணா, பீ.கேதீஸ்



நுவரெலியா மாவட்ட கொட்டகலை பிரதேச சபையின் தலைவராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர் ராஜமணி பிரசாத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் உப -தலைவராக தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஜோசப் யாகுள மேரி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## இலங்கையர் நால்வர் காயம்

### இஸ்ரேல் தூதுவர் தெரிவிப்பு



ஈரானுடனான மோதல்களுக்கு மத்தியில், இஸ்ரேல் மீதான சமீபத்திய தாக்குதல்களில் நான்கு இலங்கையர்கள் காயமடைந்துள்ளதாக இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதர் உறுதிப்படுத்தினார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சபையை சூடேற்றியது

சபாபநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை (17) காலை 9.30 மணியளவில் கூடியது. பிரதான நடவடிக்கைகளின் பின்னர். தினப் பணிகள் ஆரம்பமானது. அப்போது, எதிர்க்கட்சிகளின் பிரதம கொரடாவான கயந்த கருணாதிலக்க எழுந்து, முக்கியமான அவசர விடயமொன்று தொடர்பில் கருத்து வெளியிடுவதற்காக ஒன்றரை நிமிடத்தை வழங்குமாறு சபாநாயகரிடம் அனுமதி கோரிநின்றார்.

அதன்போது பதிலளித்த சபாநாயகர் நீங்கள் கூற வரும் விடயம் சபையை நடத்திச் செல்வது தொடர்பான ஏதேனும் ஒழுங்கு பிரச்சினையாக இருந்தால் மட்டுமே பேசலாம். வேறு விடயத்தை ஏதேனும் அறிக்கை மூலம் முன்வைக்கலாம் என்று கூறி நேரத்தை ஒதுக்க மறுத்துவிட்டார்.

அத்துடன் விசேட கூற்றை விடுமாறு சிறீதரன் எம்.பியை அழைத்தார். ஆனால், தனது கூற்றை சிறீதரன் எம்.பி. முன்வைக்க முடியாதளவுக்கு எதிர்க்கட்சியினர் தொடர்ச்சியாக தமக்குக் கருத்து தெரிவிக்க அனுமதி வழங்குமாறு கூச்சலிட்டனர்.

எனினும் சபாநாயகர் தொடர்ந்தும் அனுமதி வழங்க மறுப்புத் தெரிவித்தார். இவ்வாறான நிலையில் பெரும் கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் சிறீதரன் எம்.பி. தனது கூற்றை முன் வைத்தார். அதற்கு நீதி அமைச்சரும் பதிலளித்தார்.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் எழுந்து கருத்து தெரிவிக்க அனுமதி கோரினார். இதன்போது அவருக்கு பேச சபாநாயகர் அனுமதி வழங்கினார். இஸ்ரேல் - ஈரான் இடையே ஏற்பட்டுள்ள யுத்தம் அணு ஆயுத யுத்தம் வரையில் தள்ளப்படும் நிலைமை காணப்படுவதாகவும், இதனால் இஸ்ரேலில் வசிக்கும் இலங்கையர்கள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும். அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சியைச் சேர்ந்த மற்றைய எம்.பிக்களும் பேசுவதற்கு அனுமதி கோரினர். எனினும் அதற்கு சபாநாயகர் அனுமதி வழங்க மறுப்பு தெரிவித்தார். இவ்வேளையில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பதிலளிக்கையில் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போது வெளிவிவகார அமைச்சு பதில் வழங்கும். அதுவரையில் காத்திருங்கள் என்றார்.

ஆனால் தொடர்ந்தும் தமக்கு போதுமான நேரம் வழங்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தினார். அரச தரப்பினருக்கு நேரம் வழங்கப்படுவதைப் போன்று எதிர்க்கட்சியினருக்கும் போதுமான நேரத்தை வழங்க வேண்டும். அரச தரப்பு பிரதம கொரடாவுக்கு நேரம் வழங்கிவிட்டு, எதிர்க்கட்சி பிரதம கொரடாவுக்கு நேரம் வழங்க முடியாது என்று கூற முடியாது. அவ்வாறு நடந்துகொள்ளக்கூடாது. தொடர்ந்தும் நாங்கள் சபாநாயகரின் சர்வாதிகார செயற்பாட்டை அனுமதிக்கப் போவதில்லை. நாங்கள் ஜனநாயக ரீதியில் செயற்படுவதற்கு நீங்கள் வாய்ப்பை வழங்காவிட்டால் நாங்கள் இந்த சபையில் இருக்க மாட்டோம் என்று கூறினார்.

இதனை தொடர்ந்து சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க எழுந்து கூறுகையில்,

அதிகளவில் எதிர்க்கட்சியினரே தினமும் பேசுகின்றனர். இதேவேளை இஸ்ரேல்-ஈரான் - யுத்தம் தொடர்பில் இன்று (நேற்று) சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையும் உள்ளது. இவ்வாறான நிலைமையிலேயே இவர்கள் இப்படி நேரம் கேட்கின்றனர். தோல்வியின் வேதனையில் ஊடகங்களின் பார்வையை தம் பக்கம் திருப்புவதற்காக இவர்கள் இப்படிச் செய்கின்றார்களோ தெரியவில்லை. எதிர்க்கட்சி எம்.பிக்களின் செயற்பாடுகள் முறையற்றதாக உள்ளன. மிளகாய்த் தூள் வீசப்படும் போதுகூட பேசாதளவுக்கு இவர்கள் பேசுகின்றனர். இவர்களால் ஒழுக்கத்தைப் பாதுகாக்க முடியாவிட்டால் எதிர்க்கட்சி தலைவர் பதவியில் இருப்பதில் பிரயோசனமும் இல்லை என்றார்.

இதனைத் தொடர்ந்து சபையில் இருந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் சபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். இவர்களுடன் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி.யான ரவி கருணாநாயக்கவும் வெளியேறிச் சென்றார்.

ஆனால் இலங்கை தமிழரசுக் கட்சி எம்.பிக்கள், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி எம்.பி. ஆகியோர் தொடர்ந்தும் சபையில் இருந்து விவாதத்தில் பங்கேற்றனர்

## "எதிர்க்கட்சி தலைவர் தகுதியற்றவர்"



பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (17) அன்று இடம்பெற்ற அமர்வின் போது எதிர்க்கட்சித் தலைவரின் மேலதிக கேள்விக்கு சபாநாயகரினால் அனுமதி மறுக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சி எம்.பிக்கள் சபையில் இருந்து வெளி நடப்பு செய்தனர். இதன்போது எழுந்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் சபை முதல்வர் பேசுகையில்,

பாராளுமன்றத்தில் சண்டித்தனமாகச் செயற்படுவதற்கு எவருக்கும் இடமளிக்க முடியாது. பாராளுமன்றத்தின் கௌரவம், கோட்பாடுகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. மிளகாய்த் தூள் தாக்குதல் நடத்த இடமளிக்க முடியாது.

எதிர்க்கட்சி எம்.பிக்கள் ஒரு சிலரின் கீழ்த்தரமான நடவடிக்கைகள் மற்றும் நடத்தைகள் வெறுக்கத்தக்கது. இவ்வாறான செயற்பாடுகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் விசேட கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை அவர் கட்டுப்படுத்த வேண்டும் அவ்வாறு கட்டுப்படுத்த முடியாவிடின், அவர் எதிர்க்கட்சி தலைவ பதவியில் இருப்பதற்குத் தகுதியற்றவர்.

எனினும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் வைத்துக் கொள்வோம். பாராளுமன்ற நடவடிக்கைகளை ஒழுக்கமான முறையில் நடத்துவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிர்க்கட்சி எம்.பிக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

## பிரான்ஸ்- இலங்கை கையெழுத்து

இந்த ஒப்பந்தத்தின் கீழ், இலங்கையின் 390 மில்லியன் கடன் கையிருப்பு 2042 வரை மறுசீரமைக்கப்படும், இதில் ஐந்து ஆண்டு சலுகை காலம் மற்றும் அசல் வட்டி விகிதங்கள் மீதான வரம்பு ஆகியவை அடங்கும்.

இந்த ஒப்பந்தத்தில் பிரெஞ்சு கருவூலத்தில் பலதரப்பு விவகாரங்கள், வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான உதவிச் செயலாளர் வில்லியம் ரூஸ் மற்றும் இலங்கை நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சகத்தின் செயலாளர் மஹிந்தா சிறிவர்தன ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இலங்கைக்கான பிரெஞ்சு தூதர் ரெமி லம்பேர்ட், இலங்கை துணை அமைச்சர் டாக்டர் ஹர்ஷனா சூரியப்பெருமா மற்றும் மத்திய வங்கி ஆளுநர் டாக்டர் நந்தலால் வீரசிங்க ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு பிரான்சின் ஆதரவில் இந்த இருதரப்பு ஒப்பந்தம் ஒரு முக்கிய மைல்கல்லைக் குறிக்கிறது. கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கான இலங்கையின் முக்கிய அதிகாரப்பூர்வ கடன் வழங்குநர்களிடையே ஒருங்கிணைந்த முயற்சியின் ஒரு பகுதியாகும், மேலும் மூன்றாம் தரப்பு கடன் வழங்குநர்களுக்கான சிகிச்சையின் ஒப்பீட்டுக் கொள்கையுடன் ஒத்துப்போகிறது.

இந்த ஒப்பந்தம் இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் 2.8 பில்லியன் மதிப்புள்ள பல ஆண்டு நிதித் திட்டத்தை செயல்படுத்துவதையும் ஆதரிக்கிறது.

## தளபதி அலி ஷத்மானி கொல்லப்பட்டார்"

ஈரானில் புதிதாக நியமிக்கப்பட்ட உயர் இராணுவ தளபதி அலி ஷத்மானியை கொன்றுவிட்டதாக இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் அறிவித்தன. இதுகுறித்து இஸ்ரேல் பாதுகாப்புப் படை வெளியிட்ட செய்திக் குறிப்பில், "ஈரானின் போர்க்கால தலைமைத் தளபதியும், ஆட்சியின் உயர் இராணுவத் தளபதியுமான அலி ஷத்மானி, துல்லியமான உளவுத்துறை தகவல்களைத் தொடர்ந்து, மத்திய தெஹ்ரானில் ஐஏஎஃப் தாக்குதலில் கொல்லப்பட்டார்" என்று ஐடிஎஃப் ட்வீட் செய்தது.

ஈரானின் போர்க்கால தலைமைத் தளபதி அலி ஷத்மானி ஈரானிய ஆயுதப் படைகளின் அவசரகால கட்டளைத் தளபதியாக பணியாற்றினார். அவர் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை (IRGC) மற்றும் ஈரானிய இராணுவம் இரண்டிற்கும் கட்டளை தளபதியாக இருந்தார்.

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மோதல் ஐந்தாவது நாளாகத் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், செவ்வாய்க்கிழமை (17) அன்று ஈரானில் இருந்து ஏவப்பட்ட புதிய ஏவுகணைகளைக் கண்டறிந்துள்ளதாக இஸ்ரேல் இராணுவம் எச்சரித்தது.

ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களின் விளைவாக ஈரான் மற்றும் இஸ்ரேலில் இறப்பு எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஈரானில், இதுவரை 224 பேர் கொல்லப்பட்டனர். 1,200 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இஸ்ரேலில், ஈரானின் பதிலடி தாக்குதல்களில் இதுவரை 24 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 592 பேர் காயமடைந்துள்ளனர்.

## "ஆடைகளின்றி அடித்து நொறுக்கி எலும்புக்கூடுகள்"

இவ்வாறே நீதித்துறையும், தடயவியல் நிபுணர்களும் குறிப்பிட்டுள்ளனர். இந்நிலையில் இவை பக்கச்சார்பில்லாமல் ,நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உண்மைகள் வெளிக்கொணரப்படுமா? என கேள்வி எழுப்பினார்

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(17) நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்சன நாணயக்கார விடம் வடக்கில், மனிதப் புதைகுழிகள் தொடர்பில் கேள்வி எழுப்பிய இவ்வாறு தெரிவித்தார்.

2010 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட முப்பது ஆண்டுகளுக்கு மேல் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட யுத்தம் காரணமாக காணாமலாக்கப்பட்டவர்களும், படுகொலை செய்யப்பட்டவர்களும் மனித எலும்புக்கூடுகளாகவும், எச்சங்களாகவும் புதைகுழிகளிலிருந்து மீட்கப்படுவதை நீங்களும் அறிவீர்கள்.

அந்த வகையில், மண்டைதீவு செம்பாட்டுத் தோட்டம், புனித தோமையார் ஆலயத்தின் அருகாமை. திருக்கேதீஸ்வரம், முல்லைத்தீவு குமுழமுனை, கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட மனித புதை குழிகளின் வரிசையில் தற்போது யாழ்ப்பாணம் செம்மணி சிந்து பாத்தி பகுதியிலிருந்தும் மனித என்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ள நிலையில் அவை முழுமையாக தமிழ்மக்களுடையவை தான் என்பது தெளிவாகிறது.

குறிப்பாக சிந்து பாத்தி மயானத்தை அண்மித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது மீட்கப்பட்ட கைக் குழந்தைகள், பெண்கள், ஆண்கள். சிறுவர், சிறுமியர்களின் எலும்புக்கூடுகள் எந்த ஆடைகளற்று அடித்து நொறுக்கி, சித்திரவதை செய்து கொல்லப்பட்டவர்களின் என்புக்கூடுகள் என்பதையே நீதித்துறையும், தடயவியல் நிபுணர்களும் குறிப்பிடுகின்றனர். அந்த வகையில் மனித புதைகுழிகள் மலிந்த இடமாகவே வடக்கு, கிழக்கு பகுதிகள் உள்ளன என்பதை அமைச்சர் அறிவாரா?.

தற்போது யாழ்ப்பாணம் செம்மணி சிந்து பாத்தி இந்து மயானத்திற்கு அருகில் தோண்டி எடுக்கப்படும் மனித எலும்புக்கூடுகள் தொடர்பாக பக்கச்சார்பில்லாமல் -நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உண்மைகள் வெளிக்கொணரபடுமா?

இதற்கு முன்னர் நடைபெற்ற முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிகளின் அகழ்வுப் பணிகள் நிறைவுபெற்றுவிட்டதா என்பதையும், அது சார்ந்து நீதித்துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் எவை என்பதையும் அமைச்சர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

மண்டைதீவு செம்பாட்டுத்தோட்டம் தோமையார் தேவாலயம் பகுதியில் உள்ள மனிதப் புதைகுழியில், 1990களில் வேலணை, மண்கும்பான். அல்லைப்பிட்டி, மண்டைதீவுப் பகுதிகளில் இருந்து அழைத்துவரப்பட்ட சிறுவர்களும், இளைஞர்களும் புதைக்கப்பட்டார்கள் என வடக்கு, கிழக்கு மனித உரிமை அமைப்புகள் குறிப்பிடுகின்றன. இது சார்ந்த விசாரணைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அமைச்சர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

3ஆம் வட்டாரம், மண்டைதீவைச் சேர்ந்த திருமதி.சூசைதாஸ் ஜேசுரட்ணம் தர்ம ராணி என்ற தாயார். தனது இரு பிள்ளைகள் உட்பட்ட 84 பேர் மண்டைதீவில் காணாமலாக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான நீதியைப் பெற்றுத்தருமாறு 2025.04.30 ஆம் திகதி ஜனாதிபதிக்கு ஒரு கடிதத்தை அனுப்பி, அதன் பிரதியை எனக்கும் கிடைக்கச் செய்துள்ளார். 1990 ஆம் ஆண்டு காணாமலாக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்கு என்ன நேர்ந்தது என்ற கேள்விகளோடு காத்திருக்கும் இந்தத் தாய்மாருக்கு அமைச்சரின் பதில் என்ன?

திருக்கேதீஸ்வரம் பகுதியில் அடையாளப்படுத்தப்பட்ட மனிதப் புதைகுழியின் அகழ்வு கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதன் உண்மை நிலை எப்போது வெளிவரும் என்பதை அமைச்சர் இந்த சபைக்கு அறிவிப்பாரா? எனக் கேள்வி எழுப்பினார்.

## இலங்கையர் நால்வர் காயம்

செவ்வாய்க்கிழமை (17) காலை 5.00 மணி நிலைவரப்படி, காயமடைந்தவர்களின் உடல்நிலை சீராக இருப்பதாகவும், வரும் நாட்களில் அவர்கள் பணிக்குத் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதர் நிமல் பண்டாரா தெரிவித்தார்.

கூடுதலாக, மேலும் இரண்டு இலங்கையர்கள் தற்காலிகமாக அவர்களது வீடுகளில் இருந்து மாற்றப்பட்டனர், அவர்களின் முதலாளி மாற்று தங்குமிட வசதிகளை வழங்கியுள்ளார். இலங்கைத் தூதரகத்தின் ஒரு ஊழியரும் அவரது வீட்டிற்கு சொத்து சேதத்தை சந்தித்தார், இருப்பினும் அவருக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

ஈரானால் நடத்தப்பட்ட ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்கள் இரவு முழுவதும் தொடர்ந்ததாகத் தெரிவித்தார்.

பல ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் இடைமறிக்கப்பட்டாலும், டெல் அவிவ், ஹைஃபா மற்றும் ஜெருசலேம் உட்பட பல அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட பகுதிகள் தாக்குதலுக்கு உள்ளானதாக அவர் குறிப்பிட்டார்.

நிலையற்ற பாதுகாப்பு நிலைமையைக் கருத்தில் கொண்டு இஸ்ரேலில் வசிக்கும் இலங்கையர்களுக்கான புதுப்பிக்கப்பட்ட பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை தூதரகம் வெளியிட்டுள்ளது.

## கதிர்காம காட்டு வழி 2 தினங்களில் திறப்பு



கதிர்காமப் பாதயாத்திரீகர்கள் தங்கும் முதலாவது இடைத்தங்கல் பிரதேசமான வாகூர வெட்டை, கிணற்றடி (வண்ணாத்தி வெட்டை) பகுதியில், கடந்த இரு வாரங்களுக்கு முன் பெய்த மழை காரணமாக, பெரும்பாலான இடங்களில் வெள்ளம் தேங்கி நின்றன. ஆனால், அவையெல்லாம் வற்றி இன்று உவப்பானதாக உள்ளது.

அங்குள்ள கிணறுகளும் தொண்டு நிறுவனங்களால் நீரிறைத்து சுத்தமாக்கப்பட்டுள்ளன.

மேலும், கிழக்கு, ஊவா மாகாணங்களின் எல்லையில் உள்ள குமுக்கன் ஆற்றின் ஓட்டமும் கடந்த வாரங்களில் கணிசமாக அதிகரித்து காணப்பட்டதாயினும், தற்போது முகத்துவாரம் ஊடாக நீர் வழிந்து ஓடுவதாகவும் சில நாட்களில் நீர் ஓட்டமும் மேலும் குறையக்கூடிய வாய்ப்பும் இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளையில், சிறுத்தைகளின் பெருக்கமும் நடமாட்டமும் வழமைக்கு மாறாக அதிகமாகக் காணப்படுகின்றமை முக்கியமாகக் கவனிக்கக்கூடிய ஒன்றாகக் காணப்படுகின்றது. தாம் அவற்றை நேரடியாகக் கண்டதாகவும் சங்கர் ஜீ கூறினார்.

எது எப்படியோ காலை இரவு நேரங்களில் மற்றும் அதிகாலை வேளைகளில் காட்டுவழிகளில் நடமாடுவதைக் கூடுதல் கவனத்துடன், கையாளவேண்டுமென்று தொண்டர் அமைப்புகள் கேட்டுள்ளன.

இத் தகவல்கள் யாரையும் பீதியடைய வைப்பதற்காக அல்ல, மாறாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே பதிவு செய்யப்படுகிறது.

## கொட்டகலையில் சேவல் கூவியது

மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் செவ்வாய்க்கிழமை (17) அன்று நடைபெற்ற கொட்டகலை பிரதேச சபையின் கன்னி அமர்வில் பகிரங்க வாக்கெடுப்பின் மூலம் தலைவர், உப தலைவர் தெரிவு இடம்பெற்றது.

சபை அமர்வில் 16 உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்த நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் ரகசிய வாக்கெடுப்பு நடத்துமாறு கோரினர். எனினும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் பகிரங்க வாக்கெடுப்பைக் கோரினர். அதிக உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமையப் பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்படும் என ஆணையாளர் தெரிவித்தார்.

ஆணையாளரின் அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் நால்வர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது வெளிநடப்பு செய்தனர். 12 உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்து கொண்ட போதும் ஈரோஸ் ஜனநாயக முன்னணி உறுப்பினர் ஒருவர் மற்றும் ஜனநாயக தேசிய முன்னணி உறுப்பினர்கள் ஒருவருமாக இருவர் வாக்களிக்காது நடுநிலை வகித்தனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டனர்.

இதன்படி, 10 வாக்குகளின் மூலம் தலைவர், உப-தலைவர் தெரிவு செய்யப்பட்டனர்.

















# கேக் கண்காட்சி

■ டி.கே.ஜி.கபில

உள்ளூர் மற்றும் சர்வதேச வேலைவாய்ப்பு சந்தையை இலக்காகக் கொண்டு, கேக், பேக்கரி மற்றும் பேஸ்ட்ரி உற்பத்தித் துறையில் NVQ-04 பாடநெறிகளைப் படிப்பதற்கான வசதிகளை வழங்கியுள்ள நீர்கொழும்பு 'டூன்ஸ்' பேக்கரி மற்றும் கேக் உயர் கல்வியின் ஊடாக இரண்டு நாள் கண்காட்சியை செவ்வாய்க்கிழமை (17) அன்று ஆரம்பமானது.

இந்த உயர்கல்வி நிறுவனத்தின் முதல்வர்,

சர்வதேச சமையல்காரர் விருது வென்ற பாத்திமா நிலூஃபா அமீர்தீன், இந்தக் கண்காட்சி இந்த நிறுவனத்தால் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யப்படும் 06ஆவது கண்காட்சி என்று கூறியுள்ளார்.

சர்வதேச சமையல்காரர் மற்றும் ஒலிம்பிக் விருது வென்ற திமுத்து குமாரசிங்க அஸ்திரேலியாவிலிருந்து வந்து இந்தத் தொடக்க நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்த உயர்கல்வி நிறுவனத்தில் பேக்கரி, கேக் மற்றும் பேஸ்ட்ரி உற்பத்திப் பாடநெறிகளைப் படிக்கும் 85 மாணவர்கள் இந்தக் கண்காட்சிக்காக தங்கள் படைப்புகளைச் சமர்ப்பித்திருந்தனர்.

இந்தக் கண்காட்சி நீர்கொழும்பில் உள்ள அவேந்திரா கார்டன் ஹோட்டல் வளாகத்தில் புதன்கிழமையும்(18) அன்று நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தோமையார் மனிதப் புதைகுழி

# "டக்ளஸிடம் விசாரிக்கவும்"

மண்டைதீவு - செம்பாட்டுத்தோட்டம், தோமையார் தேவாலயம் பகுதியில் உள்ள மனிதப் புதைகுழி தொடர்பில் ஈ.பி.டி.பி.யின் செயலாளரும் முன்னாள் அமைச்சரும் இராணுவ ஒட்டுக் குழுத் தலைவராக இருந்தவரான டக்ளஸ் தேவானந்தாவிடம் விசாரணை நடத்தப்பட வேண்டுமென தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (17) அன்று மண்டைதீவு செம்பாட்டுத் தோட்டம், புனித தோமையார் ஆலயத்தின் அருகாமையில், திருக்கேதீஸ்வரம், முல்லைத்தீவு, குமுழமுனை, கொக்குத்தொடுவாய், யாழ்ப்பாணம்-செம்மணி சிந்துப்பாத்தி மனிதப் புதைகுழிகள் தொடர்பாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் கௌரவ. ஹர்ஷண நாணயக்காரவின் கவனத்திற்கு கொண்டு வந்து கேள்வி எழுப்புகையிலேயே இவ்வாறு வலியுறுத்தினார்.

மண்டைதீவு செம்பாட்டுத்தோட்டம் தோமையார் தேவாலயம் பகுதியில் உள்ள மனிதப் புதைகுழியில், 1990களில் வேலணை, மண்கும்பான். அல்லைப்பிட்டி, மண்டைதீவுப் பகுதிகளில் இருந்து அழைத்துவரப்பட்ட சிறுவர்களும், இளைஞர்களுமே புதைக்கப்பட்டார்கள் என வடக்கு, கிழக்கு மனித உரிமை அமைப்புகள் குறிப்பிடுகின்றன. 3ஆம் வட்டாரம், மண்டைதீவைச் சேர்ந்த திருமதி. சூசைதாஸ் ஜேசுரட்ணம் தர்ம ராணி என்ற தாயார். தனது இரு பிள்ளைகள் உட்பட்ட 84 பேர் மண்டைதீவில் காணாமலாக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான நீதியைப் பெற்றுத்தருமாறு 2025.04.30 ஆம் திகதி ஜனாதிபதிக்கு ஒரு கடிதத்தை அனுப்பி, அதன் பிரதியை எனக்கும் கிடைக்கச் செய்துள்ளார்.

இப்பகுதியில் படுகொலை செய்யப்பட்டவர்களின் புகைப்படங்களுடன் வெளிவந்த அறிக்கைகள் உள்ளன. மண்கும்பான். அல்லைப்பிட்டி, மண்டைதீவுப் பகுதிகளில் இருந்து அழைத்துவரப்பட்ட சிறுவர்களும், இளைஞர்களும் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டார்கள்.இவர்களை இராணுவத்தினர் அழைத்துச் சென்ற போது பெற்றோர் ,உறவினர்கள் அப்போது தீவுப்பகுதியில் இராணுவ ஒட்டு குழுவின் தலைவராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவிடம் ஓடிச்சென்று அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு மன்றாடியபோது இராணுவத்தினர் விசாரித்து விட்டு விடுவிப்பார்கள் என டக்ளஸ் கூறியுள்ளார்.



ஆனால் அவர்கள் எவரும் விடுவிக்கப்படாது படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டார்கள். எனவே, மண்டைதீவு செம்பாட்டுத்தோட்டம் தோமையார் தேவாலயம் பகுதியில் உள்ள மனிதப் புதைகுழி தொடர்பில் டக்ளஸ் தேவானந்தாவிடம் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றார்.

# பருத்தித்துறை தவிசாளர் டக்ளஸ் போல்



■ நிதர்ஷன் விணோத்

பருத்தித்துறை நகர சபையின் தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளரை தெரிவு செய்வதற்கான கூட்டம் பருத்தித்துறை நகர சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் செவ்வாய்க்கிழமை(17) அன்று நடைபெற்றது.

15 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை நகர சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 5 ஆசனங்களையும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி 4 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஆகியன தலா 2 ஆசனங்களையும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் சுயேச்சை குழு ஆகியன தலா ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியது.

தவிசாளர் பதவிக்காக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட வின்சன் டீ போல் டக்ளஸ் போலுக்கு 7 பேரும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட 4 பேரும் ஆதரவு வழங்கினர். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வெளிநடப்பு செய்ததுடன் தேசிய மக்கள் சக்தியின் இருவர் மற்றும் அர்ச்சுனா அணி ஆதரவு சுயேச்சை குழுவின் ஒருவர் வாக்கெடுப்பின்போது நடுநிலை வகித்தனர்.

# கிண்ணியா தவிசாளர் மஹ்தி



■ ஏ.எச்.ஹஸ்பர், எஸ்.கீதபொன்கலன்

கிண்ணியா நகர சபையின் தவிசாளர் தெரிவானது நகர சபையின் சபா மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (17) அன்று கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் எம்.எம்.மஹ்தி தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

பகிரங்க வாக்கெடுப்பு மூலமாக தெரிவு செய்யப்பட்டதுடன் உப தவிசாளராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உறுப்பினர் அப்துல் அஸீஸ் தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 15 உறுப்பினர்கள் கலந்துகொண்டதுடன் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் 04 உறுப்பினர்களும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் 04 உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் 03 உறுப்பினர்களும் தேசிய மக்கள் சக்தி சார்பில் 02 உறுப்பினர்களும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் தலா ஒருவரும் அடங்குவர் .

# வரலட்சுமி சரத்குமார் இலங்கை வந்தடைந்தார்



■ டி.கே.ஜி.கபில

இலங்கையில் தயாரிக்கப்படும், சர்வதேச திரையிடலுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ள 'கேஜ் பேர்ட்' திரைப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கும் பிரபல தென்னிந்திய நடிகை வரலட்சுமி சரத்குமார், கட்டுநாயக்க விமான நிலையத்தை செவ்வாய்க்கிழமை (17) காலை வந்தடைந்தார்.

இந்தப் படத்தை இலங்கை திரைப்பட இயக்குநர் சந்திரன் ரத்னம் தயாரிக்கிறார்.

அவர் இந்தியாவின் சென்னையில் இருந்து ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானம் UL-122 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு செவ்வாய்க்கிழமை (17) காலை 11.04 மணிக்கு வந்தடைந்தார்.

இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் துணை இயக்குநர் ஹரேந்திர விஜேவர்தன மற்றும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் சர்வதேச திரைப்படத் தயாரிப்பு மற்றும் மேம்பாட்டுப் பிரிவின் உதவி இயக்குநர் சமிந்த முனசிங்க ஆகியோர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் 'சில்க் ரூட்' முனையத்தில் அவரை வரவேற்றனர்.

# கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

■ ஏ.எச்.ஹஸ்பர்

மூதூர் மத்திய கல்லூரியில் நிலவும் கட்டிடத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்து, புதிய கட்டிடத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை விடுவித்து வேலைகளை ஆரம்பிக்குமாறு வலியுறுத்தி பாடசாலைக்கு முன்பாக அமைதி வழி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் திங்கட்கிழமை(16) முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

மூதூர் மத்திய கல்லூரியில் காணப்படும் ஒரு கட்டிடம் கடந்த வாரம் இடிந்து விழுந்துள்ளது. இன்னும் 2 கட்டிடங்கள் இடிந்து விழும் அபாயத்தில் காணப்படுகிறது. இதன் காரணமாக மாணவர்கள் மர நிழலில் இருந்து கல்வி கற்று வருகின்றனர்.

இந்நிலையில், முந்தைய அரசாங்கத்தால் மூதூர் மத்திய கல்லூரி புதிய கட்டிடத்திற்காக 120 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்ட நிலையில், தற்போதைய அரசாங்கத்தால் இந்த வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதோடு, இந்த அரசாங்கம் புதிய கட்டிடத்திற்கான வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பெற்றோர் கோரிக்கை விடுத்தனர். அத்தோடு, கவனயீர்ப்பு நிறைவடைந்த பின்னர் அவ்விடத்திற்குத் தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் வருகை தந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோரைச் சந்தித்துக் கட்டிட நிலைமைகளையும் பார்வையிட்டார். அத்தோடு, மூதூர் வலயக் கல்வி அலுவலக தொழில்நுட்ப அதிகாரிகளும் இவர்களோடு பிரசன்னமாகியிருந்தனர்.

மேலும், பாராளுமன்ற உறுப்பினரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னர் ரொஷான் அக்மீமன ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

"கடந்த அரசாங்கம் ஆனது மூதூர் மத்திய கல்லூரிக்குக் கட்டிடம் வழங்குவதாகக் கூறி ஏமாற்று வேலை செய்துள்ளது. முன்னாள் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரோடு இது தொடர்பாகப் பேசினேன்.

கடந்த அரசாங்கத்தால் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கடிதம் மாத்திரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதே தவிர, நிதி ஒதுக்கப்படவில்லை. இதே போன்ற பல சம்பவங்கள் பதிவாகியிருக்கிறது.நாளை பாராளுமன்றம் கூட உள்ள நிலையில் இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் பேசுவேன்" என்றார்.





# 4 கோடி ரூபாய் ஐஸூடன் காரை விட்டோடிய சாரதி



கொழும்பில் திங்கட்கிழமை(16) அன்று இரவு சாரதி கைவிட்டு சென்ற சொகுசு காரிலிருந்து சுமார் ரூ.40 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டதாக கடலோர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காரில் இருந்து நான்கு பிளாஸ்டிக் பெட்டிகளில் அடைக்கப்பட்ட 4 கிலோ 112 கிராம் ஐஸ் போதைப்பொருள், பொலிஸார் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கடலோர பொலிஸ் பிரிவில் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள், வேகமாக வந்த காரை நிறுத்துமாறு சமிக்ஞை காட்டியதால், கார் நிறுத்தாமல் சென்று கொண்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் காரைத் துரத்திச் சென்று, புறக்கோட்டை வீதியில் உள்ள முகுடு மாவத்தையில் நிறுத்தி ஓட்டுநர் உரிமம் சரிபார்க்கப்பட்டபோது, அவர் தப்பியோடியுள்ளதுடன், குறித்த நபர் ஹோமாகம, பிடிபன வடக்கில் வசிப்பவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## மலையகத்தில் இருந்து

# யாத்திரை செல்லும் இரண்டாவது குழு



■ ரஞ்சித் ராஜபக்ஷ

வரலாற்றுச் சிறப்பு மிக்க ருஹுணு கதிர்காம ஆலயத்தில் நடைபெறும் 2025ஆம் ஆண்டிற்கான எசல பெரஹராவில் பங்கேற்க மலையகத்தில் இருந்து பாத யாத்திரை செல்லும் இரண்டாவது யாத்ரீகர்கள் குழு திங்கட்கிழமை (16) அன்று மதியம் மஸ்கெலியா நல்லதன்னியிலிருந்து தங்கள் பயணத்தைத் தொடங்கினர்.

இந்தக் குழுவில் 22 பெண்கள் உட்பட நாற்பது பேர் அடங்குவதுடன் அவர்கள் மஸ்கெலியா, சாமிமலை, ஹட்டன், நுவரெலியா, வெலிமட, பண்டாரவளை, வெல்லவாய, தனமல்வில, கும்பல்கம, புத்தல மற்றும் யால சரணாலயம் வழியாக 275 கிலோமீட்டர் நடந்து சென்று குழு ஜூன் 26ஆம் திகதி கதிர்காமத்தை அடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாத்ரீகர்கள் ஒரு நாளைக்கு 40-50 கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்வதாகவும், குறித்த வீதியில் உள்ள மத இடங்கள் மற்றும் ஓய்வு இல்லங்களில் இரவு தங்கி, மறுநாள் மீண்டும் தங்கள் பயணத்தைத் தொடங்குவதாகவும் வீதியின் இருபுறமும் உள்ள மக்கள், யாத்ரீகர்களின் தேவைக்கேற்ப உணவு மற்றும் பானங்களை வழங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஐரோப்பாவின் இதயத்துடனான உறவு முக்கியமானது

சர்வதேச உறவுகள் என்பது நிர்வாகச் செயல்முறையிலும் அரசியல் அறிவியல் பாடத்திலும் மிக முக்கியமான மற்றும் தனித்துவமான காரணியாகும். இது மாநிலங்களின் பங்கு, சர்வதேச அமைப்புகள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் பங்கு, சர்வதேச அமைப்பில் உலகளாவிய பிரச்சினைகள் மற்றும் மாநிலங்களின் வெளிநாட்டு உறவுகள் ஆகியவற்றைச் சித்திரிக்கும் ஒரு முக்கிய காரணியாகும்.

இலங்கை ஒரு தீவு நாடு. எனவே, நிலவும் புவிசார் அரசியல் நிலைமைகளுக்கு எதிராக செயல்படுவது சாத்தியமற்றது. தெற்காசியப் புவியியல் பிராந்தியத்தில் அதன் அருகாமையில் அமைந்துள்ள மிகவும் சக்திவாய்ந்த நாடான இந்தியாவுடன் நெருங்கிய உறவுகளைப் பேணாமல் இலங்கை முன்னேற முடியாது. எனவே, இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே புவிசார் அரசியல் உறவுகள் பழங்காலத்திலிருந்தே இருந்து வருகின்றன.

தற்போதைய அரசாங்கம் இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகியவற்றுடன் நெருக்கமான உறவுகளை உருவாக்கி வருகிறது. இது அரசியல் ரீதியாக மிகவும் சிறப்பு வாய்ந்த விடயம்.

இந்தியாவுடனான ஒப்பந்தங்கள் இலங்கைக்கு மூலோபாய ரீதியாக மிகவும் முக்கியமானவை.

தற்போது, இலங்கை அரசாங்கத்திற்கும் ஜேர்மன் அரசாங்கத்திற்கும் இடையிலான உறவுகள் குறித்து சமூக ரீதியாக அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

இலங்கைக்கும் ஜேர்மனிக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் எழுபது ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்டுள்ளன. இது பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் ஒரு முக்கியமான உறவாகும். இது குறித்து எந்த வகையான பகுப்பாய்வு இருந்தாலும், அதை யதார்த்தமான அணுகுமுறையுடன் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

நிர்வாக செயல்பாட்டில் ஒவ்வொரு அரசியல் தலையீட்டையும் அவநம்பிக்கையான அல்லது எதிர்மறையான மனதுடன் பகுப்பாய்வு செய்ய வேண்டியதன் அவசியத்தை நாங்கள் அங்கீகரிக்கவில்லை

ஜனாதிபதியின் ஜேர்மனி விஜயத்தின் போது, இலங்கையை ஒரு நிரந்தர பங்காளியாக நிற்பதற்கு ஜேர்மனி உறுதி பூண்டுள்ளது என்பது வலியுறுத்தப்பட்டது. இலங்கைக்கும் பொதுவான நலன்களுக்கும் இடையிலான நீண்டகால நட்பின் அடிப்படையில் அந்த ஒத்துழைப்பைப் பேணுவதில் ஜேர்மனியின் பங்களிப்பும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மனிதவள மேம்பாடு, இலங்கையின் தொழில்நுட்ப மற்றும் கல்வி மேம்பாடு, பொருளாதார மற்றும் வர்த்தகத் துறைகள் மற்றும் பொதுச் சேவைகளின் செயல்திறனை அதிகரித்தல் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு ஆதரவை வழங்க ஜேர்மன் அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது.

ஐரோப்பாவின் பணக்கார நாடாக ஜேர்மனி கருதப்படுகிறது. ஜேர்மனி கூட்டாட்சி குடியரசு உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரத்தையும் கொண்டுள்ளது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைப் பொறுத்தவரை இந்த நாடு உலகில் முதலிடத்தில் உள்ளது. உலகம் முழுவதிலுமிருந்து வரும் அதிக எண்ணிக்கையிலான சர்வதேச புலம்பெயர்ந்தோருக்கு ஜேர்மன் அரசாங்கம் தங்குமிடத்தையும் வழங்குகிறது.

எனவே, ஐரோப்பாவின் இதயமாகக் கருதப்படும் ஜேர்மனியுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவது எங்களுக்கு மிகவும் முக்கியமானது. அந்த சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் அரசியல் உறவுகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. இலங்கை தீவு தேசத்தை தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் உயர்ந்த நிலைக்கு உயர்த்துவதற்கு இந்த சர்வதேச உறவுகள் மிகவும் முக்கியமானவை.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# கொழும்பில் விறாய்யின் ஆட்சி நிலத்திருக்குமா?



எம்.எஸ்.எம்.ஐயூப்

கடந்த பொதுத் தேர்தலில் விகிதாசார முறையில் தனிக் கட்சியாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்று சாதனை படைத்த தேசிய மக்கள் சக்தி கடந்த 70 ஆண்டுகளில் தலைநகரைக் கைப்பற்றிய முதலாவது இடதுசாரி கட்சி என்ற பெருமையையும் கடந்த திங்கட்கிழமை(16) அன்று நிலைநாட்டிவிட்டது.

1955ஆம் ஆண்டிலேயே இறுதியாகக் கொழும்பில் இடதுசாரி மேயர் ஒருவர் இருந்தார். பின்னர் நிதி அமைச்சராகவும் கடமையாற்றிய லங்கா சமசமாஜ கட்சியின் அக்கால தலைவரான கலாநிதி என்.எம்.பெரேரராவே அந்த மேயராவார்.

இம்முறை தேர்தலில் மற்றுமொரு முக்கியத்துவமும் இருக்கிறது. இலங்கை சுதந்திரமடைந்தது முதல் இரண்டு மேயர்களைத் தவிர் கொழும்பில் ஏனைய சகல மேயர்களும் ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்தவர்களாகவே இருந்துள்ளனர். 1954ஆம் ஆண்டு கலாநிதி என்.எம்.பெரேரா மேயரானார். 2006ஆம் ஆண்டு ஐ.தே.கவின் வேட்பு மனுப் பட்டியல் நிராகரிக்கப்பட்டதன் காரணமாக அக்கட்சி சுயேச்சை குழு ஒன்றை ஆதரித்தது. அக்குழுவின் தலைவரான முஹம்மத் இம்தியாஸ் அம்முறை மேயரானார்.

மே மாதம் 6ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் அருதிப் பெரும்பான்மை கிடைக்காத உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் மற்றும் பிரதி தவிசாளர்களை தெரிவு செய்யும் பணி இந்நாட்களில் நடைபெற்று வருகிறது.

கடந்த திங்கட்கிழமை கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட சில உள்ளூராட்சி மன்றங்களில் அப்பணி நடைபெற்றது. அதன்படி, கொழும்பு நகரின் மேயராக தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் விராய் கெலி பல்தசார் தெரிவு செய்யப்பட்டார். அதே கட்சியைச் சேர்ந்த ஹேமந்த குமார பிரதி மேயராக தெரிவு செய்யப்பட்டார்.

மேயர் பதவிக்காக இருவர் மட்டுமே பொட்டியிட்டனர். விறாய் மாநகர சபையின் 117 மொத்த உறுப்பினர்களில் 61 உறுப்பினர்களின் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். அவருடன் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் ரீஸா சருக் 54 வாக்குகளை மட்டுமே பெற்றார். இரண்டு வாக்குகள் செல்லுபடியற்றதாகி விட்டதாக தேர்தலை நடத்திய மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சாரங்கிக்கா ஜயசுந்தர தெரிவித்தார்.

மே மாதம் 6ஆம் திகதி மொத்தம் 339 உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடைபெற்ற போதிலும் அவற்றில் கொழும்பு மாநகரின் அதிகாரத்தை கைப்பற்றுவதைத் தேசிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒரு கௌரவப் பிரச்சினையாகவே கருதின. தேசிய மக்கள் சக்தி 339 உள்ளூராட்சி மன்றங்களில் 267 மன்றங்களில் முதலிடத்துக்கு வந்தது. 119 சபைகளில் அருதிப் பெரும்பான்மையை பெற்றது.

கடந்த ஜூன் 2ஆம் திகதி 161 சபைகளில் மேயர்கள் மற்றும் தவிசாளர்கள் நியமிக்கப்பட்டு அச்சபைகள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன. அவற்றில் தாம் அருதிப் பெரும்பான்மையைப் பெற்ற சபைகள் உள்ளிட்ட 151 சபைகளின் அதிகாரத்தைத் தேசிய மக்கள் சக்தியே கைப்பற்றிக்கொண்டது.

தேசிய அளவில் பிரதான கட்சிகளாக கருதப்படும் ஏனைய மூன்று கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆகியவற்றுக்கு அன்று ஒரு சபையிலேனும் அதிகாரத்தை கைப்பற்ற முடியவில்லை. இலங்கை தமிழரசுக் கட்சி உள்ளிட்ட சில கட்சிகள் 10 சபைகளை கைப்பற்றிக்கொண்டன.

எனவே, நாட்டின் பிரதான உள்ளூராட்சி மன்றமான கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றி அந்த அத்தனை அவமானத்தையும் மூடி மறைத்துக் கொள்ளலாம் என்று அம்மூன்று கட்சிகளும் கருதின. அதேவேளை, எத்தனை சபைகளை வென்றாலும் தலைநகரை வெற்றிகொள்ளாவிட்டால், அது பெரும் அவமானமாகத் தேசிய மக்கள் சக்தி கருதியது.

எனவே, இரு தரப்பினரும் ஆதரவு தேடித் தேர்தலில் ஆசனங்களை வென்ற சிறு கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தன. அத்தோடு, மாநகர சபையின் அதிகாரத்தைக் கைப்பற்ற தமக்கே தார்மிக உரிமை இருக்கிறது என்றும் இரு சாராரும் வாதிடலாயினர்.

தனிக் கட்சியாகத் தாமே கூடுதல் ஆசனங்களை வென்றுள்ளோம் என்றும் எனவே, அந்த தார்மிக உரிமை தமக்கே இருக்கிறது என்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் வாதிட்டனர். தேசிய மக்கள் சக்திக்கு சபையில் 117 உறுப்பினர்களில் 48 உறுப்பினர்கள் மட்டுமே இருக்கின்றனர் என்றும் 69 உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக உள்ளனர் என்றும் ஏனைய கட்சிகள் கூறின. 69 உறுப்பினர்களுக்கும் அதிகமானோர் கட்சிகளுக்கு எதிராக போட்டியிட்டே தெரிவாகியுள்ளனர் என்பதை அவர்கள் காணவில்லை போலும்.

தேர்தலுக்கு முன்னர் திருடர்கள் என கூறி, ஏனைய கட்சிகளை விமர்சித்த தேசிய மக்கள் சக்திக்கு மேயர் தெரிவின் போது, ஏனைய சிறு கட்சிகளின் ஆதரவைப் பெறத் தார்மிக உரிமை இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி மற்றும் பொதுஜன முன்னணி ஆகிய கட்சிகளின் தலைவர்கள் வாதிட்டனர். ஒன்றையொன்று எதிர்த்துப் போட்டியிட்ட அக்கட்சிகளுக்கும் கூட்டாக சபையின் அதிகாரத்தை கைப்பற்றத் தார்மிக உரிமையில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களும் கூறினர். இறுதியில் தேசிய மக்கள் சக்தி தலைநகர் கொழும்பைக் கைப்பற்றிவிட்டது.

தேசிய மக்கள் சக்திக்கு கொழும்பு மாநகர சபையில் 48 உறுப்பினர்களே இருக்கின்றனர். அவர்களுடன் சேர்ந்து விராய் கெலி பல்தசாருக்கு வாக்களித்த மற்றைய 13 உறுப்பன்ர்கள் யார் என்பது இனித் தான் தெரிய வரும். அவர்கள் ஏனைய மூன்று பிரதான கட்சிகளின் உறுப்பினர்களாக இருந்தால் அது விறாய்யின் நிர்வாகத்தை விரைவில் பாதிக்கலாம். ஏனெனில், யார் என்று தெரிய வந்தால் அக்கட்சிகள் அவ்வுறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கலாம். அவர்களுக்குப் பதிலாக புதிய உறுப்பினர்களை நியமிக்கலாம். அவ்வாறு செய்யாவிட்டாலும் அது சபையில் பெரும்பான்மை வாக்குகளால் பிரேரணைகளை நிறைவேற்றிக் கொள்வதில் விராய்க்கு பிரச்சினையாக அமையலாம்.

சபையில் மேயர் தெரிவுக்கான தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் அதற்கான வாக்கெடுப்பு இரகசிய வாக்கெடுப்பாக நடைபெற வேண்டுமா? அல்லது பகிரங்க வாக்கெடுப்பாக நடைபெற வேண்டுமா? என்று தேர்தலை நடத்திய மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சாரங்கிக்கா ஜயசுந்தர சபையோரிடம் கேட்டார். அதற்கு இரகசிய வாக்கெடுப்பு நடைபெற வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கூறினர். ஏனைய மூன்று கட்சிகளை சேர்ந்தவர்கள் அதனை எதிர்த்தனர். கடும் வாக்குவாதத்தை அடுத்து, இறுதியில் இரகசிய வாக்கெடுப்பு நடத்துவதென ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

தேர்தலில் விராய் வெற்றி பெற்றதையடுத்து, ஐமசவின் சில உறுப்பினர்கள் ஆணையாளர் சட்டவிரோதமாக நடந்துகொண்டார் என்றும் அதற்கு எதிராக தாம் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் கூறியிருந்தனர். ஆனால், சபையினர் ஏகமனதாக விருப்பம் தெரிவிப்பதால் இரகசிய வாக்கெடுப்பை நடத்துவதாக கூறிவிட்டே ஆணையாளர் வாக்கெடுப்பை நடத்தினார். இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்ததன் பின்னரே இரகசிய வாக்கெடுப்பு நடைபெற்றது என்று சகல ஊடகங்களும் தெரிவித்தன. வாக்கெடுப்பும் அமைதியாக நடைபெற்றதாகவே தொலைக்காட்சி மூலம் காணக்கூடியதாக இருந்தது. எனவே, சட்ட நடவடிக்கை பயன் தருமா என்பது சந்தேகமானதாகும்.

இரகசிய வாக்கெடுப்பு என்பது ஒன்றும் சட்ட விரோதமான நடவடிக்கை அல்ல. சபையின் பெரும்பான்மையோரின் விருப்பத்துக்கு மாறாக அது நடைபெற்று இருந்தால் மட்டுமே அது சட்ட விரோதமாகும். 2022ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பொன்றின் மூலமே ரணில் விகரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

எவ்வாறாயினும், மேயர் விராய் இப்போது சில சவால்களைச் சந்திக்க நேரிடும். அவருக்கு மேயராக வருவதற்கு உதவிய ஏனைய கட்சிகளை அல்லது சுயேச்சை குழுக்களை சேர்ந்த உறுப்பினர்கள் சிலவேளை, தொடர்ந்து ஆதரவு வழங்குவதற்காகப் பகரமாகப் பல கோரிக்கைகளை முன்வைக்கலாம். அவை சிலவேளை ஊழலாகவும் அமையலாம்.

அதேவேளை, அவ்வாறு மேயராவதற்கு அவருக்கு உதவிய ஏனைய குழுக்களைச் சேர்ந்தவர்கள் பல்வேறு காரணங்களுக்காக தமது ஆதரவை வாபஸ் பெறலாம். 1955ஆம் ஆண்டு கொழும்பு மாநகர சபையில் கலாநிதி என்.எம்.பெரேராவுக்கு ஆதரவு வழங்கிய கம்யூஸ்ட் கட்சி உறுபபினர் அந்தனி மார்செலஸ் ஐ.தே.கவுக்குத் தாவினார். அத்தோடு, என்.எம்.பெரேரா சபையில் பெரும்பான்மையை இழந்தார். ஐ.தே.க. அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டு வந்தது. அவர் பதவியை இழந்தார். ஐ.தே.கவின் வீ.ஏ.சுகத்ததாச மேயரானார்.

அதேபோல், ஏனைய கட்சிகளின் சில உறுப்பினர்களின் ஆதரவின்றி மாநகர சபையின் வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதும் சிலவேளை பிரச்சினையாகலாம். ஆயினும், முதல் வரவு-செலவுத் திட்டம் தோல்வியடைந்தாலும் உள்ளூராட்சி மன்ற சட்டத்தின் படி, மேலும், ஒரு வருடம் வரை மாநகர சபையை நடத்திச் செல்ல சபையின் அனுமதியின்றி நிதி வசதி பெற முடியும். ஆனால், அதன் பின்னர் முடியாது.

இதுபோன்ற இடையூறுகள் இல்லாவிட்டாலும். மத்திய அரசாங்கத்தில் நடைபெறுவதைப் போலவே ஊழலுக்குப் பழகிவிட்ட உயர் அதிகாரிகள் ஊழலற்ற முறையில் மாநகரை அபிவிருத்தி செய்வதற்குப் பல இடையூறுகளை விளைவிக்கலாம். அவற்றை உடைத்துக்கொண்டு முன் செல்வதானால் முதலில் மேயர் நேர்மையான அதிகாரிகளை இனங்கண்டு படிப்படியாக ஊழல் பேர்வழிகளைக் களையெடுக்க வேண்டியேற்படும். அந்தத் தடையைத் தாண்டினால் கொழும்பை அபிவிருத்திச் செய்யப் போதியளவு வருமானம் மாநகர சபையிடம் இருக்கிறது.



## வாழ்வியல் தரிசனம்

பிபஞ்சம் முழுமையாகப் பிரகாசிக்க, ஒவ்வொருவரின் உள்ளத்திலும் முழு உலகையும் அரவணைக்கும் அன்பு எனும் ஒளியைப் பாய்ச்ச முயற்சி செய்க! இது கடினமானது இல்லை.

புன்னகை செய்து, விழிகள் மூலம் கருணையுடன் நோக்குக! எதிரிகளே இல்லாத நிலையில், வாழ்ந்திட முயலுங்கள்.

இயன்றளவு சாதாரண உதவிகளைப் பிறருக்குச் செய்யத் தயங்க வேண்டாம். எக்காரணம் கொண்டும், சூடான சொற்பதங்களைப் பிரயோகிக்க வேண்டாம்.

தமக்குப் பிடிக்காததை, மற்றொருவருக்குக் கொடுப்பது, நாகரிகமானது அல்ல! தானம் செய்யும்போது கூட, கழித்துவிடும் பொருட்களை வழங்கலாகாது.

பசித்தோருக்கு இயன்றவரை வழங்குவது மேலானது. உடலுக்கு உணவு வழங்குதல், ஒருவரின் ஆன்மாவுக்கே ஆறுதல் அளிப்பது போலாகும்.

எவரையும் நிராகரிக்க வேண்டாம். எல்லோரும் எமக்கு வேண்டப்பட்டவர்கள். யாவரும் செய்யும் சிறு கொடைகள், முழு உலகையும் உயர்த்தும்.

– பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

# மண் திட்டு சரிந்து விழும் அபாயம்



மஸ்கெலியா - நோட்டன் பிரதான வீதியில் மவுஸ்ஸாக்கலை சந்தி பிரதான வீதி அருகில் உள்ள பாரிய கருப்பந்தைல மரம் அதன் அடியில் உள்ள மண் திட்டுடன் எந்த நேரத்திலும் சரிந்து விழும் அபாயம் உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது நிலவும் காலநிலையுடன் குறித்த மரம் சரிந்தால் வீதியில் செல்லும் வாகனங்கள் மற்றும் மக்களுக்கு உயிர் சேதங்கள் ஏற்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக நோர்வூட் பிரதேச செயலகம், நோர்வூட் வீதி அபிவிருத்தி அதிகாரசபை , மஸ்கெலியா பிரதேச சபை மற்றும் மவுஸ்ஸாக்கலை தோட்ட அதிகாரிகள் முன் வந்து மரத்தை வெட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்

– செ.தி.பெருமாள்

# சிறுவர் பாதுகாப்பும் சமூக மயமாக்கலும்

தி.திலோஷினி,
4ஆம் வருட சிறப்புக் கற்கை மாணவி,
கல்வி, பிள்ளை நலத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.



சிறுவர்கள் வளர வளர அவர்களின் பாதுகாப்பும் அதிகரித்துக்கொண்டே வருகிறது ஒவ்வொரு பிள்ளையும் வெவ்வேறான சமூகத்தில் குடும்பத்தில் வளர்கின்றதுடன், இன்றைய காலத்தில் சிறுவர்கள் பல அச்சுறுத்தல்களுக்கும் சவால்களுக்கும் ஒவ்வொரு நிமிடமும் முகங் கொடுத்துக்கொண்டே வருகின்றனர். 18 வயதுக்கு உட்பட்ட அனைவரும் சிறுவர்களாகக் கருதப்படுகின்றனர். இவ்வாறான அச்சுறுத்தல்களில் இருந்து தங்களைப் பாதுகாக்கச் சிறுவர்களிடையே தற்பாதுகாப்பு தொடர்பான சமூக மயமாக்கல் அவசியமானதாகக் காணப்படுகிறது.

இவ்வாறான அச்சுறுத்தல்களும் சவால்களும் துஷ்பிரயோகம் என்ற வடிவில் சிறுவர்களை அணுகுவதாகக் காணப்படுகிறது. சிறுவர் எனும் பொழுது ஆண்-பெண் ஆகிய இரு பாலினத்தவரையும் குறிப்பதாக உள்ளதுடன், சிறுவர் துஷ்பிரயோகம் என்பது ஒரு பெற்றோர், பராமரிப்பாளர் அல்லது நம்பிக்கைக்குரிய ஒரு நபரால் சிறுவருக்குத் தீங்கு விளைவிக்கும் அச்சுறுத்தலுக்கு வழிவகுக்கும் எந்தவொரு செயலையும் அல்லது சிறுவருக்கான தேவைகளை நிறைவேற்றாது கவனிக்காமல் விடுதலையும் குறிக்கின்றது. இது உடல் ரீதியான துஷ்பிரயோகம் உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகம் பாலியல் துஷ்பிரயோகம் புறக்கணிப்பு மற்றும் சுரண்டல் உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் நிகழ்கிறது. இவ்வாறான துஷ்பிரயோகங்கள் பல சந்தர்ப்பங்களில் பல சூழல்களில் பிள்ளைகளைத் தாக்குவதாக அமைகின்றது. உதாரணமாக குடும்பம், பாடசாலை, சமூக மையங்கள் போன்றவற்றில் இடம்பெறுகிறது.

அதாவது வீட்டினைப் பொறுத்த வரையில் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு அடித்தல், வலுக்கட்டாயமாக வேலைக்கு அனுப்புதல், பாடசாலைக்கு அனுப்பாமல் வீட்டு வேலைகள் செய்ய வைத்தல் போன்றனவும் பெற்றோர் வேலைக்கு வெளிநாட்டிற்குச் செல்லும்போது, உறவினர்கள் பிள்ளைகளை அதிக வேலை செய்ய பணித்தல், அடித்தல், சூடு வைத்தல், பாலியல் வற்புறுத்தல்கள் போன்ற பல துஷ்பிரயோகங்கள் நிகழ்கின்றன

அதுமட்டுமின்றி, பிள்ளைகள் பாதுகாப்பாகக் கருதும் அவர்களை வழிப்படுத்தும் இடமாகக் காணப்படும் பாடசாலையினை பொறுத்தவரையில் சில ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு காதுகளை துருவுதல், உடலில் காயம் ஏற்படும் வண்ணம் அடித்தல், பாலியல் தொல்லைகள் அளித்தல் பிள்ளைகளை மிரட்டல், உணர்வு ரீதியான துஷ்பிரயோகம் போன்ற சம்பவங்களும் நிகழ்ந்த வண்ணமே உள்ளதுடன் சமூக அமைப்புக்களைப் பொறுத்த வரையில் தனியார் வகுப்புக்கள், மத ஸ்தாபனங்கள் போன்றவற்றில் சில முறையற்ற நபர்களினூடாக சிறுவர்கள் பாலியல் ரீதியான வன்புணர்வுக்கும், தவறான தொடுகைகளுக்கும் மிரட்டல்களுக்கும், கடத்தல்களுக்கும் சில சிறுவர்கள் யாசகம் எடுப்பதற்கும் ஆளாகின்ற பல சம்பவங்கள் காணப்படுகிறன. இதனால் சிறுவர்கள் வெளியில் கூறுவதற்குப் பயந்து தற்கொலை செய்து கொள்கின்ற சம்பவங்களும் பதிவாகின்றன. இச்செயற்பாடானது பூவொன்று காயாக முதல் பறித்துக் கசக்கப்படுவதாக காணப்படுகிறது.

2024ஆம் ஆண்டு ECPAT (குழந்தைகள் மீதான பாலியல் சுரண்டலை முடிவுக்குக் கொண்டுவருவதற்காகச் செயல்படும் சிவில் சமூக அமைப்புகளின் உலகளாவிய வலையமைப்பாகும்) ஊடக அறிக்கைகளின் படி 60 பிள்ளைகள் பாதிக்கப்பட்ட 55 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதில் பாலியல் ரீதியாக 19 சம்பவங்களும் குழந்தைகள் புறக்கணிப்பு தொடர்பான 8 வழக்குகளும் அதைத் தொடர்ந்து உடல் ரீதியான துஷ்பிரயோகம் 06 சம்பவங்களும் கொலை முயற்சி 01 சம்பவமும் பிறந்த குழந்தை ஒன்று வேண்டுமென்றே கொல்லப்பட்ட 01 சம்பவமும் காணப்படுகிறது.

ஆகவே, துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்ட 60 சிறுவர்களில் பல்வேறு வயதினர் காணப்படுகிறனர். இதில் 11 முதல் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இந்த சம்பவங்களின் அதிகம் பாதிக்கப்படுபவர்களாகக் காணப்படுகின்றனர். மேலும், தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் அறிக்கையின் படி 2024ஆம் ஆண்டில் 18 சிறுவர் தற்கொலை முயற்சிகள் இடம்பெற்றதாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தினை பொருத்த வரையில் 111 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறு சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது என்பது மறுக்கமுடியாத ஒரு நிகழ்வாகக் காணப்படுகிறது. இவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கும் மிரட்டல்களுக்கும் சிறுவர்கள் பயப்படாமல் எதிர்த்துச் சமாளித்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கான சமூக மயமாக்கல் அவசியமானதாகக் காணப்படுகிறது. இவ்வாறு சிறுவர்களுக்கு தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்கான உத்திகளையும் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கும் மிக முக்கிய அமைப்பாகப் பாடசாலை விளங்குகின்றது. சான்றாக இன்று முன் பள்ளிகள் பாடசாலைகளில் ஆரம்ப பிரிவிலேயே ஆசிரியர்கள் மாணவர்களுக்கு Good Touch, Bad Touch போன்ற தொடுகைகளைக் கற்றுக்கொடுத்து செயல் ரீதியில் மாணவர்களைப் பழக்குகின்றனர். இதனால் மாணவர்கள் மத்தியில் தங்களை யார் எந்த நோக்கத்தில் தொடுகிறார்கள் என்ற புரிதல் பிள்ளைக்கு கிடைக்கின்றது. மேலும், வீடுகளிலும் சரி பாடசாலைகளிலும் சரி சமூக அமைப்புக்களிலும் சரி யார் அடித்தாலும் வேலைக்கு அமர்த்தினாலும் புறக்கணிப்பு செய்தாலும் பாலியல் ரீதியான வன்புணர்வுக்கு உட்படுத்தினாலும் பயப்படாமல் யாருக்குத் தெரிவிக்க வேண்டும், எவ்வாறு அதற்கு முகம் கொடுக்க வேண்டும் என்கிற அறிவினை வழங்குவது அவசியமானதாகக் காணப்படுகிறது.

பாடசாலைகளில் சுற்றறிக்கை இலக்கம்: 2011/17 கல்வி அமைச்சும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் ஒருங்கிணைந்து நடைமுறைப்படுத்துகின்ற நிகழ்ச்சித் திட்டமாக காணப்படும் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழு 'சுரெக்கும் பவ்வ' காணப்படுகிறது. இக்குழுவின் மூலம், 1.அனைத்து விதமான சிறுவர் துஷ்பிரயோகங்களிலிருந்தும் சிறுவர்களைப் பாதுகாத்தல், 2.பல்வேறு விதமான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகிய பிள்ளைகள் பாடசாலையில் இருப்பார்களெனில் மிகவும் இரகசியமாக இனங்காணலும் அத்தகைய பிள்ளைகளுக்கு அவசியமான கவனிப்பையும் பாதுகாப்பினையும் உறுதி செய்வதும் சட்டத்தை அமுலாக்கும் பொருட்டு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினை விழிப்பூட்டலும், 3.கல்விச் செயற்பாட்டில் பின்தங்கிய பிள்ளைகளை வகுப்பு மட்டத்தில் இனங்காணலும் அதில், தாக்கமேற்படுத்தியுள்ள சமூக, பொருளாதார காரணிகள் மற்றும் குடும்பப் பின்னணியை இனங்காணும் பொருட்டு நடவடிக்கை எடுத்தலும், அவசியமான ஆலோசனைகளை வழங்குதல், தொடர் நடவடிக்கைகள் மற்றும் வளப் பற்றாக்குறையை நிறைவு செய்வதற்கான வழிப்படுத்தல்களும், 4.விசேட உளரீதியான அல்லது உடல் ரீதியான தேவைகள் கொண்ட பிள்ளைகளுக்கு உதவி புரிதல், 5.பிள்ளைகளின் மன அழுத்தங்களை குறைப்பதில் தாக்கமேற்படுத்தக்கூடிய ஆக்கப்பூர்வமான சிகிச்சை நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்கல், 6.பிள்ளைகளின் மகிழ்ச்சிகரமான உணர்வுகளையும் துன்பகரமான அனுபவங்களையும் வெளிப்படுத்தலும் பரிமாற்றிக்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கலும், 7.பிள்ளைகள், மேம்படுத்தல். பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கிடையிலான இடைத்தொடர்களை 8.பிள்ளைகளுக்குச் செவிமடுத்தல். 9.பிள்ளைகளின் பாதுகாப்புக்காகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சேவைகளையும் இணைப்பாக்கத்தையும் தொடர்ச்சியாக வழங்குதல். 10. பாடசாலைப் பிள்ளைகள் புகைபிடித்தல், மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனை, பாலியல் தொல்லைகள் மற்றும் ஏனைய தீய நடத்தைகளின் பால் வழிநடத்தப்படுவதைத் தடுத்தல். 11. ஒழுக்கம் நிறைந்த நடத்தைகள் தொடர்பாகப் பாடசாலைப் பிள்ளைகளுக்குள்ள பொறுப்பு பற்றி விளக்கமளித்தலும் ஆக்க முறையான அவர்களின் ஆளுமையைக் கட்டியெழுப்புதலும், 12.ஒழுக்கமுள்ள சிறுவர் நேயமுடைய பாடசாலை சுற்றாடலை உருவாக்குதல். 13.நிறைவான ஆளுமைகளைத் தேசத்திற்கு உரிதாக்கிக் கொடுத்தல் ஆகிய செயற்பாடுகள் காணப்படுகிறன. ஆகவே, துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகும் சிறுவர்கள் பாடசாலையில் இக் குழுவை அணுகி தங்களது பிரச்சினைகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பங்களைப் பாடசாலை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இது சிறுவர்களைத் தவறான முடிவுகளில் இருந்து பாதுகாக்கும் ஒரு செயற்பாடாக அமைகிறது. இதனால் சிறுவர்கள் தங்கள் பிரச்சினைகளைப் பயமில்லாமல் தெரிவிப்பதற்கு சமூக மயமாக்கிக் கொள்கின்றனர்.

அத்துடன், பாடசாலையில் பிரதேச செயலகங்கள் ஊடாகவும் பல விழிப்புணர்வு கருத்தரங்குகள் உள வள ஆற்றுப்படுத்துகை நிகழ்ச்சிகளும் நிகழ்கிறன. பாடசாலைகளில் சிறுவர்களை கொண்டு துஷ்பிரயோகங்களில் இருந்து எம்மை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது தொடர்பான விழிப்புணர்வு வீதி நாடகங்கள், கருத்தரங்குகள் என்பன நிகழ்கின்றன இதனூடாக மேலும் சிறுவர் துஷ்பிரயோகம் நிகழும் போது அதனைத் தெரிவிப்பதற்கு என பாதுகாப்பு அதிகார சபைக்குச் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் புகாரளிப்பதற்கான 1929 தொலைபேசி இலக்கம் காணப்படுகிறது என்பதையும் சிறுவர் துஷ்பிரயோகத்தை புகாரளிப்பதற்கான நிறுவனங்களாக பொலிஸ் பெண்கள் சிறுவர் பிரிவு பணிமனை, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை போன்றவை காணப்படுகின்றன என்பது பற்றியும் மாணவர்களுக்கு கருத்தரங்குகள் ஊடாக தெரிவிக்கின்றன.

மேலும், சில பாடசாலைகளில் மாணவர்களுக்குத் தற்காப்புக் கலைகளையும் பயிற்றுவிக்கின்றன இதனூடாக மாணவர்கள் தங்களுக்கு வரும் துஷ்பிரயோகத்தில் இருந்து எவ்வாறு பாதுகாத்து கொள்வது யாரை அணுகுவது போன்ற விடயங்களை கற்றுக் கொள்கின்றனர். சமூகத்தில் தங்களுக்கு ஆதரவாகக் காணப்படும் அமைப்புக்கள் திட்டங்கள் சட்டங்கள் பற்றிய அறிவும் தெளிவும் கிடைக்காமையே இன்று அதிகளவான சிறுவர்கள் மிரட்டல்களுக்குப் பயந்து தற்கொலை செய்து கொள்கின்றனர் இதற்கு சிறுவர்கள் சமூகமயமாகமையே ஆகும். சில பாடசாலைகள் மாணவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு சிறுவர் துஷ்பிரயோகம் சட்டங்கள் தொடர்பான கருத்தரங்குகள் வீதி நாடகங்கள் பயிற்சி பாசறைகள் நிகழ்த்தி மாணவர்களை சமூக பயன்படுத்தினாலும், சில பாடசாலைகளில் இவை கவனிக்கப்படாமல் காணப்படுகிறன. ஆகவே, சிறந்த தலைவர்களையும் பிரஜைகளையும் உருவாக்கும் பொறுப்பு ஒவ்வொரு பாடசாலையிலும் கல்வி சார்ந்தவர்களிடமும் காணப்படுகிறது. முடிந்தவரை ஒவ்வொரு சிறுவர்களையும் சமூகமயப்படுத்தி அவர்களுக்கு துஷ்பிரயோகத்திலிருந்து எவ்வாறு தங்களைப் பாதுகாத்துக் கொள்வது பற்றிய தெளிவினை வழங்கி வெளி உலகிற்கு அறிமுகம் செய்வது ஒவ்வொரு கல்விப் புலம் சார்ந்தவர்களின் கடமையாக உள்ளது.



## இலங்கையில் மனித உரிமைகளின்
# அண்மைக்கால போக்கு



நிசன்குமார் கோபிநாத்,
கலைப்பீடம்,
முதலாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

மனித உரிமைகள் என்பது மனிதராகப் பிறக்கின்ற அனைவருக்கும் இருக்கின்ற அடிப்படை உரிமையாகும். ஒரு பிரஜை ஜனநாயக நாட்டில் மட்டும் வாழ்ந்தால் அவனது வாழ்வு அர்த்தமானதாகக் கட்டமைத்து விடாது. அவன் அடிப்படையான உரிமைகளை அனுபவிக்கின்ற பொழுதே அந்த நாடு ஜனநாயகம் என்ற தன்மையை உறுதி செய்கின்றது. எனவே, ஜனநாயக நாட்டிலேயே பிரஜைகள் நமக்கான உரிமையைப் பெற்றுக்கொள்ள முடியும். அதைப் பாசிச ஆட்சியிலோ எதெட்சை அதிகார ஆட்சியிலோ அவர்களுக்கான அடிப்படை உரிமைகளை வேண்டி நிற்க முடியாது. அங்கு உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு விடயமாகவே காணப்படும். ஆகவே, தான் ஜனநாயகத்தின் இன்றியமையாத ஒரு பண்புகளில் உரிமைகள் அடையாளப்படுத்தப்படுகின்றது.

ஆனால், இன்று ஜனநாயக நாடுகளின் ஆட்சியாளர்களின் தான்தோன்றித்தனமான ஆட்சிப் போக்கு மற்றும் அதிகார குவிப்பு காரணமாக அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இது இன்றைய காலப்பகுதியில் உரிமைகளை சுதந்திரமாக அனுபவிப்பதற்கு சவாலாக அமைகின்றது.

இதற்கு நாம் எல்லா ஆட்சியாளர்களையும் குற்றம் சாட்ட முடியாது ஒரு சில ஆட்சியாளர்களின் செயல்பாடு இதற்கு காரணமாகின்றது. முக்கியமாக சர்வதேச ரீதியில் அடிப்படை மனித உரிமை மீறலை இல்லாதொழித்து அதனை வலுப்படுத்தும் நோக்கிலேயே 1948ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் மனித உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்டது.

இதன் பிரதான நோக்கம் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகளில் மனித உரிமை மீறலை இடம்பெறுவதைத் தடுத்து மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதன் தன்மையிலே இன்று வரை ஐக்கிய நாடுகள் சபையினால் உருவாக்கப்பட்ட மனித உரிமை பிரகடனமானது. சர்வதேச ரீதியில் முன்னுதாரணமாகக் கொள்ளப்படுகின்றது. இது 30 உறுப்புரைகளைக் கொண்டுள்ளமை முக்கியமானதொரு அம்சமாகும். அவற்றுக்குச் சான்றாக சில அடிப்படை உரிமைகளை நாம் குறிப்பிட முடியும். வாழ்வதற்கான உரிமை, கருத்து வெளியிடும் உரிமை, சுதந்திரமாக நடமாடுவதற்கு உரிமை, விரும்பிய சமயத்தைப் பின்பற்றும் உரிமை இவ்வாறு பல்வேறு உரிமைகளை அடிப்படை உரிமைகளாக உள்ளடக்கியுள்ளது.

உண்மையிலேயே, உரிமைகளற்ற மனித வாழ்வு பாலைவனத்தைப் போன்றது என்றே குறிப்பிட முடியும். உரிமைகளில் மூலமே மனிதனுடைய அரசியல் சமூக வாழ்க்கை அர்த்தமானதாக அடையாளப்படுத்தப்படுகின்றது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. இலங்கையிலும் 1956ஆம் ஆண்டு மனித உரிமை பிரகடனம் ஏற்றுக்கொண்டு, அதனை அதிகாரப்பூர்வமாகக் கையொப்பமிட்டது. இதன் அடிப்படையில், 1972ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பில் மனித உரிமைகள் பற்றிய ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. எனினும், உரிமைகளைப் பாதுகாப்பதற்காக எந்த ஒரு கட்டமைப்பும் அங்கு அரசியல் அமைப்பில் உருவாக்கப்படவில்லை என்பது ஒரு குறைபாடாக சுட்டிக்காட்டப்படுகிறது. எனவே, தான் 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் மனித உரிமை தொடர்பான ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டு, அதில், உரிமையைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளும் அரசியல் அமைப்பில் உருவாக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக உயர் நீதிமன்றங்களின் மனித உரிமை மீறல் தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யக்கூடிய தன்மை மற்றும் ஒம்புட்ஸ்மண்ட் போன்ற ஏற்பாடுகளைக் குறிப்பிட முடியும்.

இலங்கையைப் பொறுத்தவரையில், அடிப்படை உரிமை மீறல் அதிகரித்துள்ளமை மிக முக்கியமான அம்சமாகும். அரசியலமைப்பின் ஊடாக அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டு காணப்படுகின்றதோடு, அந்த உரிமை மீறலுக்கான நிவாரண ஏற்பாடுகள் காணப்பட்டாலும், இன்றுவரை மனித உரிமை மீறல்களை நாம் அவதானிக்கும் பொழுது

"இலங்கை அரசியலமைப்பு உரிமைகள் மட்டும் அதனைப் பாதுகாப்பதற்குக் கட்டமைப்புகள் காணப்படுகின்றதா? என்ற கேள்வி எமக்குள் எழுகின்றது"

"ஆம் அடிப்படை உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகள் காணப்படுகின்றன. ஆனால், அவை அரசியல் தலையீடு காரணமாக பிரயோகப்படுத்தப்படுகின்றமை இல்லை. மக்கள் தமக்கான உரிமைகளை மீறப்படும் போது, அதற்கான தீர்வுகளை எட்டக்கூடிய வழிமுறைகள் காணப்படுகின்றன. ஆனால், நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? என்றால் இல்லை"

இதுவரை காலமும் உரிமை மீறப்பட்டவர்களுக்கான தீர்வு எட்டப்பட்டுள்ளதா? இல்லை குறைவான தன்மைகளே காணப்படுகிறது. ஏன்?!

அடிப்படை உரிமை மீறல் இடம்பெற்றுள்ளது. இலங்கையில் அண்மைக்கால உரிமை மீறல் சம்பவங்களுக்கு இன்றுவரை தீர்வுகள் எட்டப்படாமையும் சர்வதேச ரீதியில் இலங்கை தொடர்ச்சியாக அழுத்தத்திற்கு உள்ளாகியமையும் நம்மால் அவதானிக்கும் கூடியதாகக் காணப்படுகின்றது.

உரிமைகள் என்பது, ஒரு பிரஜை உயிருடன் இருக்கும் வரை அனுபவிக்கின்ற ஒன்று அல்ல, ஒரு பிரஜை இறந்த பின்பும் அவர் நல்லடக்கம் செய்யும் வரை உரிமைகள் முக்கியமானது. உரிமைகள் நிறைவு பெற்ற சமூகத்தையே ஜனநாயகம் என்று அடையாளப்படுத்தப்படுகின்றது. மாறாக, உரிமைகள் மீறப்படும் சமூகங்களை அல்ல என்பதை நாம் நினைவு கொள்ள வேண்டும். இன்று பல நாடுகள் ஜனநாயக ஆட்சி முறை என்று குறிப்பிட்டாலும், அதன் போர்வையிலே ஜனநாயகம் என்பதில்லை இலங்கையிலும் ஜனநாயக ஆட்சி என்பது வெளிப்படையாக ஒரு ஒரு பொம்மை பொருளாகத் தான் காணப்படுகிறது. ஆனால், உள்ளே பார்த்தால் பல்வேறு உரிமை மீறலுக்கான தீர்வுகள் இன்றும் எட்டப்படவில்லை என்பதே உண்மை.

பயங்கரவாத தடைச்சட்டம்

இலங்கையில் மனித உரிமை மீறல் இடம்பெற்றுள்ளமைக்கு பயங்கரவாத சட்டம் முக்கியமான காரணமாகும். 1979ஆம் ஆண்டு ஜூலை மாதம் 48ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டம் ஆனது தற்காலிக ஏற்பாடு சட்டமாகத் திருத்தச் சட்டமாகத் தற்காலிக ஏற்பாட்டுத் திருத்தச் சட்டமாக 10ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டம் என குறிப்பிடப்பட்டது. அது 1982ஆம் ஆண்டு நிரந்தரச் சட்டமாக நிறைவு செய்யப்பட்டது. யுத்த காலப்பகுதியில் அரசு தேசியப் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்டமை என்று கூறுகின்றது. ஆனால், இது ஒரு வகையில் ஏற்றுக்கொள்ளக்கூடியது தான்.

ஆனால், காரணம் இன்றி சிறையில் கைது செய்யப்பட்டு இன்றும் விடுவிக்கப்படாமல் இருக்கின்றார்கள். ஆகவே இங்கே எவ்வித குற்றம் புரியாதவர்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ளது. இதற்கான தீர்வு என்ன? இதற்கான அரசின் பொறுப்பு கூறல் என்ன? இவ்வாறு சிறையில் அடைக்கப்பட்ட மக்கள் சுதந்திரமான வாழ்வதற்கான உரிமை அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது. இதற்கான தீர்வுதான் என்ன? யுத்த காலப்பகுதியில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இன்றும் அவர்கள் சார்பில் நீதியை வேண்டி நிற்கின்றது. எனவே, காணாமல் ஆக்கப்பட்டவர்களை விசாரிக்கும் உரிமை அவர்களின் குடும்பங்களுக்கு இருக்கின்றது. ஆனால் அதற்கான தீர்வு இன்னும் எட்டப்படவில்லை என்பது முக்கியமானது. அரசு என்பது ஒரு நாட்டி; நாட்டின் உள்ள அனைத்து மக்களுக்கும் உரிமையை அனுபவிப்பதற்கான சூழலை உருவாக்குவது அரசின் முதன்மை கடமை ஆனால் இன்று இது தலைகீழாக மாற்றி உள்ளது அரசே அந்த உரிமைகளைப் பலவீனப்படுத்தியுள்ளமை முக்கியமானது.

இந்த பயங்கரவாத தடை சட்டத்துடன் தொடர்புடைய இன்னும் ஒரு விடயம் பயங்கரவாத தடைச் சட்டம் யுத்த காலப்பகுதியில் தேசியப் பாதுகாப்பு நிமித்தம் காரணமாக உருவாக்கப்பட்டது. அதை ஒரு வகையில் கொண்டாலும். யுத்தம் நிறைவடைந்து இன்று வரை 15 வருடங்களுக்கு மேலாகக் கடக்கின்ற போதும், பயங்கரவாத தடைச் சட்டம் ஏன் நீக்கப்படவில்லை? இதற்கு பின்னால் இருக்கின்ற அரசியல் தலையீடு என்ன? இதனால் வடகடகு, கிழக்கு மக்களின் நடமாடும் உரிமை கருத்து வெளியிடும் உரிமை போன்ற பல்வேறு அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன. இனிவரும் காலங்களிலாவது அரசு இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதில் கவனம் செலுத்துமா அதற்கான பொறுப்பு கூறலை நிறைவேற்றுமா என்பதற்கான அரசினுடைய பதில் கட்டாயம் தேவைப்படுகின்றது.

ஒவ்வொரு அரசாங்கங்களும் பதவி அமைக்கும் பொழுது இந்த உரிமை மீறல்களைக் குறைப்பதற்கான விடயங்களில் ஏன் செல்வாக்கு செலுத்துவதில்லை அதற்கு அரசியல் தலையீடுகளா இனரீதியான பாகுபாடா? காரணமாக அமைகின்றது.

சர்வதேச ரீதியிலும் இலங்கை அரசாங்கம் கடந்த காலங்களில் ஏற்பட்ட மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பு கூற வேண்டிய நிலை காணப்படுகின்றது. அத்துடன், சர்வதேச ரீதியில் பல்வேறு அழுத்தங்களுக்கு உட்பட்டு உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ஐக்கிய நாடுகள் சபையின் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற 56வது மனித உரிமைகள் மாநாட்டிலே இலங்கை அரசாங்கம் யுத்த காலப்பகுதியில் ஏற்பட்ட மனித உரிமை மீறல் தொடர்பான பொறுப்புக் கூறலில் நிறைவேறத் தவறி உள்ளது என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சர்வதேசநாணயநீதியும் இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டம் உடனடியாக நீக்க வேண்டும். என்ற கட்டளையைப் பிறப்பித்துள்ளது. இதற்குப் பின்னால் உள்நாட்டிலே மக்களுடைய கோரிக்கைகளுக்கு அப்பாலும் அரசு ஏன் இன்னும் அந்த உரிமை மீறலுக்கான தீர்வையும் பெற்றுக் கொள்ளப்படுவதில்லை அந்த பயங்கரவாத சட்டத்தை நீக்குவதிலும் கவனம் செலுத்துவதில்லை.

ஒரு அரசினுடைய மக்கள் அந்த தேசிய அரசிலே தமக்கான உரிமை மீறலுக்கான தீர்வை பெற்றுக்கொள்ள முடியும். அதற்கான தீர்வு வெளிச்சத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியாது என்பதனை நாம் உணர வேண்டும். முதலாவதாக தமக்கான உரிமைகள் பாதுகாக்கப்படும் என்ற தன்மையிலே அவர்கள் ஆட்சியாளர்களை நம்பி தமது வாக்கினை அளிக்கின்றார்கள். ஆனால், ஆட்சியாளர்களின் தான்தோன்றித்தனமான ஆட்சிப் போக்கு காரணமாக இன்று மக்கள் உரிமைகளை அனுபவிப்பதில் சவாலுக்கு உட்படுத்தப்படுகின்றனர். ஆகவே, உரிமைகள் என்பது ஒரு மனிதனுக்கு அடிப்படையானது ஒரு நாட்டின் அபிவிருத்தியில் இந்த உரிமைகள் என்பதை முக்கியமானவை. ஒரு நாடு ஜனநாயக ரீதியில் வளர்ச்சியடைய வேண்டுமாயின், இந்த அடிப்படை உரிமைகள் பெரும்பான்மை சிறுபான்மை என்று பார்க்கப்படாமல் அனைவருக்கும் உறுதி செய்யப்பட வேண்டிய அடிப்படை அம்சமாகும்.

ஈரான்

இஸ்ரேல் வரலாற்றில்

# மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்படும்


இஸ்ரேல் மீது திங்கட்கிழமை (16) தீவிர தாக்குதல் நடத்தியுள்ள நிலையில், முந்தையவற்றை விட மிகவும் வலிமையானது, கடுமையானது, துல்லியமானது மற்றும் அழிவுகரமானதாக இருந்ததாக ஈரான் கூறியுள்ளது.

மறுபுறம் ஈரான் தலைநகர் டெஹ்ரானில் வசித்து வரும் மக்களை வெளியேறுமாறு இஸ்ரேல் இராணுவம் எச்சரித்துள்ளது. இதன் மூலம் அங்கே தீவிர தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்நிலையில், இஸ்ரேல் மண்ணில் வரலாற்றில் மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்படும் என்று ஈரான் அறிவித்துள்ளது.

இரு நாடுகளும் நான்காவது நாளாக பெரும் தாக்குதல்களைப் பரிமாறிக் கொண்ட நிலையில், இஸ்ரேலை நோக்கி புதிய ஏவுகணை தாக்குதல்கள் நடத்த உள்ளதாக ஈரான் அரசு ஊடகங்கள், திங்கட்கிழமை (16) இரவு அறிவித்துள்ளன.


மேலும், இஸ்ரேல் மண்ணில் வரலாற்றில் மிகப்பெரிய மற்றும் மிகவும் தீவிரமான ஏவுகணைத் தாக்குதலுக்கு ஈரான் தயாராகி வருவதாகவும், ஈரான் அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.



அமெரிக்கா

பாதியில் வெளியேறிய ட்ரம்ப்:

## ஈரான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டம்?




இஸ்ரேல்-ஈரான் இடையே பதற்றமான சூழல் நிலவி வரும் நிலையில், ஜி7 உச்சி மாநாட்டில் பங்கேற்றிருந்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பாதியிலேயே வெளியேறியுள்ளார்.

இதுதொடர்பாக வெள்ளை மாளிகை செய்தித்துறை செயலாளர் கரோலின் லீவிட் வெளியிட்ட பதிவில்,

"ஜி7 மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி ட்ரம்ப், இங்கிலாந்து பிரதமர் கியெர் ஸ்டார்மருடன் மிகப்பெரிய வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உடனடியாக வெளியேறினார். மத்திய கிழக்கில் ஏற்பட்டிருக்கும் பதற்றத்தால், உச்சி மாநாட்டுப் பயணத்தை முடித்துவிட்டு இன்றிரவே வெள்ளை மாளிகை திரும்ப உள்ளார்" என குறிப்பிட்டுள்ளார்.

கனடா பயணத்தைப் பாதியில் முடித்து விட்டுத் திரும்புவதற்கு முன்னதாக, ட்ரூத் சோஷியல் இணையதளப் பக்கத்தில் ட்ரம்ப் வெளியிட்டுள்ளப் பதிவில்,

"நான் கையெழுத்துப் போடக் கூறியிருந்த அணு ஆயுத ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திட்டிருக்க வேண்டும். ஈரான் அணு ஆயுதத்தை வைத்திருப்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இது வெட்கக் கேடானது. இதனால், மனித வாழ்க்கைதான் வீணாகிறது. இதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது" என பதிவிட்டுள்ளார்.

இந்த நிலையில், அமெரிக்கா திரும்ப உள்ள ஜனாதிபதி ட்ரம்ப், வெள்ளை மாளிகையில் உள்ள அவசரகால அறையில், தேசியப் பாதுகாப்பு கவுன்சில் உறுப்பினர்களைத் தயாராக இருக்க உத்தரவிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனிடையே, ஈரானை அமெரிக்காவும் தாக்க வேண்டும் என்று இஸ்ரேல் கோரிக்கை வைத்து வருகின்றது. இந்த நிலையில், அமெரிக்காவும் ஈரான் மீது தாக்குதலைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவின் பங்கர் - பஸ்டர் குண்டுகளைக் கொண்டு ஈரானின் அணுசக்தி நிலையங்களைத் தாக்கி அழிக்கும் என்று கூறப்படுகிறது.

ஈரான்

## பாதாள அறையில் தஞ்சமடைந்த தலைவர்



இஸ்ரேல் இராணுவத்தின் தாக்குதல் தீவிரமடைந்துள்ள நிலையில், ஈரான் மதத் தலைவர் அயத்துல்லா அலி கொமெனி, குடும்பத்துடன் பாதாள அறையில் தஞ்சமடைந்துள்ளார்.

இதுகுறித்து இஸ்ரேல் இராணுவ வட்டாரங்கள் கூறியதாவது,

"கடந்த 13ஆம் திகதி ஈரான் மீது தாக்குதல் நடத்தினோம். அன்றைய தினமே அயத்துல்லா அலி கொமேனி மீதும் தாக்குதல் நடத்தியிருக்க முடியும். நாங்கள் அவ்வாறு செய்யவில்லை. அவருக்கு ஒரு வாய்ப்பை வழங்கி இருக்கிறோம்.

ஈரானின் அணு ஆயுத திட்டத்தை அவர் முழுமையாகக் கைவிட வேண்டும். இல்லையெனில் அணு ஆயுத திட்டத்துக்கான கட்டமைப்புகளை இஸ்ரேல் முழுமையாக அழிக்கும். அயத்துல்லா அலி கொமேனி பாதாள அறையில் பதுங்கியிருந்தாலும் எங்களால் தாக்குதல் நடத்த முடியும்" என தெரிவித்துள்ளன.

ஈரான்

இந்திய மாணவர்களுக்காக

## தரைவழி எல்லைகள் திறப்பு

இந்தியாவின் கோரிக்கையை ஏற்று அங்கு வசிக்கும் இந்திய மாணவர்கள் வெளியேற தரைவழி எல்லைகளை ஈரான் அரசு திறந்துள்ளது.

ஈரானில் தற்போது 4,000க்கும் மேற்பட்ட ஹந்தியர்கள் வசிக்கின்றனர். அவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் மாணவர்கள். ஈரானில் உள்ள பெரும்பாலான இந்திய மாணவர்கள் ஜம்மு-காஷ்மீரைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இந்நிலையில் ஈரானில் படிக்கும் மாணவர்களை பாதுகாப்பாக வெளியேற்ற உதவுமாறு ஈரான் அரசை, இந்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்நிலையில், இந்திய அரசு கேட்டுக் கொண்டதற்கு இணங்க, தங்களது தரைவழி எல்லைகளை திறந்து உள்ளதாகவும், அதன் வழியாக மாணவர்கள் பாதுகாப்பாக வெளியேறலாம் என்றும் ஈரான் அரசு நேற்று அறிவித்துள்ளது.

ஈரான் அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில், "ஈரான் மீதான வான்வழி மூடப்பட்டிருந்தாலும், பொதுமக்கள் பாதுகாப்பாக நாட்டை விட்டு வெளியேறும் வகையில் அனைத்து தரைவழி எல்லைகளும் திறந்திருக்கும். மாணவர்கள் பாதுகாப்பாக செல்லலாம்" என்று கூறப்பட்டுள்ளது.



உத்தரப்பிரதேசம்

கட்டிபிடித்தபடி பயணம் செய்த

## காதல் ஜோடிக்கு அபராதம்



உத்தரப்பிரதேச மாநிலம், நொய்டாவில் காதல் ஜோடி சைக்கிளில் ஆபத்தான முறையில் பயணம் செய்துள்ள வீடியோ இணையத்தில் வைரலாகி வருகின்றது.

இளைஞர் ஒருவர் சைக்கியை செலுத்த, பெண் ஒருவர் சைக்கிள் எஞ்சினில் அமர்ந்து கொண்டு இளைஞரை இறுக்கமாக கட்டிப்பிடித்தபடியே பயணம் செய்துள்ளார். இந்த காதல் ஜோடி ஹெல்மெட் கூட அணியவில்லை.

இதனை அவ்வழியே காரில் வந்த ஒருவர் வீடியோ எடுத்து இணையத்தில் பதிவிட்டுள்ளார். இந்த வீடியோவிற்கு இணையத்தில் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளது. இதனையடுத்து ஆபத்தான முறையில் பயணம் செய்த காதல் ஜோடிக்குப் போக்குவரத்து பொலிஸார் ரூ.53,500 அபராதம் விதித்துள்ளனர். அபராத செலானை நொய்டா போக்குவரத்து பொலிஸார் தங்களது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளனர்.



உலகக் கிண்ணத்துடன்

# மத்தியூஸ் ஓய்வு

சர்வதேச கிரிக்கெட் சபையின் 2026 இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடருடன் ஓய்வு பெறுவதை தனது உடற்றகுதியைப் பொருட்டு இலக்காகக் கொண்டுள்ளதாக அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை (17) அன்று ஆரம்பித்த பங்களாதேஷுடனான முதலாவது டெஸ்டுடன் டெஸ்ட் போட்டிகளிலிருந்து 38 வயதான மத்தியூஸ் ஓய்வு பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் இலங்கையின் அண்மைய மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான அணியில் மத்தியூஸ் இடம்பெறவில்லை என்பது அவதானிக்கத்தக்கது.



பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்டில்

## உதார, தரிந்து அறிமுகம்

காலியில் செவ்வாய்க்கிழமை (17) ஆரம்பித்த பங்களாதேஷுக்கெதிரான முதலாவது டெஸ்டில் இலங்கைக்கான அறிமுகத்தை இரண்டு கைகளாலும் பந்துவீசும் தரிந்து ரத்னாயக்க மேற்கொண்டதுடன், டெஸ்ட் போட்டிகளுக்கான அறிமுகத்தை ஆரம்பத் துடுப்பாட்டவீரர் லஹிரு உதார மேற்கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் ஆரம்பத்திலேயே அனாமுல் ஹக்கை அசித பெர்ணாண்டோவிடம் இழந்ததுடன், பின்னர் தரிந்துவின் அடுத்தடுத்த ஓவர்களில் ஷட்மான் இஸ்லாம், மொமினுல் ஹக்கை (29) இழந்தது.

எனினும் அதன்பின்னர் ஜோடி சேர்ந்த அணித்தலைவர் நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ, முஷ்பிக்கூர் ரஹீமின் இணைப்பில் தேநீர் இடைவேளையின்போது தமது முதலாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுகளை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஷன்டோ 70 ஓட்டங்களுடனும், முஷ்பிக்கூர் 66 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் காணப்பட்டனர்.

கழக உலகக் கிண்ணம்:

## லொஸ் ஏஞ்சலஸை வென்ற செல்சி



சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கழக உலகக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அமெரிக்காவின் ஜோர்ஜியாவில் செவ்வாய்க்கிழமை (17) அதிகாலை நடைபெற்ற அந்நாட்டுக் கழகமான லொஸ் ஏஞ்சலஸ் கால்பந்தாட்டக் கழகத்துடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சி வென்றது.

செல்சி சார்பாக பெட்ரோ நெட்டோ, என்ஸோ பெர்ணாண்டஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

## நாப்போலி செல்லும் கிரேலிஷ்




இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்சர் சிற்றியின் முன்களவீரரான ஜக் கிரேலிஷ்ஷைக் கைச்சாத்திட இத்தாலிய சீரி ஏ கழகமான நாப்போலி ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

29 வயதான கிரேலிஷ்ஷின் சக சிற்றி வீரரான கெவின் டி ப்ரூனேயும் நாப்போலியில் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும் வாரத்துக்கு 150,000 பவுண்ஸ்கள் வரையான ஊதியத்தை 29 வயதான கிரேலிஷ் ஏற்றுக் கொள்வாரெனத் தெரிகிறது.

# எவெர்ற்றன் செல்கிறார் கைல் வோக்கர்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் பின்களவீரரான கைல் வோக்கர், ஓராண்டு ஒப்பந்தமொன்றில் இன்னொரு பிறீமியர் லீக் கழகமான எவெர்ற்றனில் இணைய இணங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.'

கடந்த பருவகாலத்தின் இரண்டாவது அரைப் பகுதியில் இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலனுக்காக கடனடிப்படையில் 35 வயதான வோக்கர் விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 18, ஜூன் 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.